விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 055 வள்ளுவர் ஆண்டு 2055 தை 29 திங்கட்கிழமை (12.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வெடுக்குநாறி மலையில் மீண்டும் பிக்குகள் அடாவடித்தனம்!

## சிவனுக்கு அருகில் பாதணியுடன் நடமாட்டம்

(வவுனியா)

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்குப் பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவினர் நேற்று இராணுவப் பாதுகாப்புச் சகிதம் சென்று ஆதிலிங்கேஸ்வரர் அருகில் பாதணிகளுடன் நடமாடியதுடன் இது எங்கள் பூமி எனக் கோசமிட்டமையால் அப்பகுதியில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)





இராணுவத்தினரால் குறித்த குழுவினர் அழைத்து வரப்பட்டவேளை...

## இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் அதீத கருசனையில் இந்தியா



(புதுடில்லி)

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் இந்தியாவின் தலையீடுகள் அதிகமாக இருக்கும் என்றும் புதுடில்லிக்கு ஆதரவான ஓர் அரசாங்கத்தை கொண்டுவரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராஜதந்திர வட்டாரங்கள் ஊடாக தெரிய வருகிறது.

பூகோள அரசியலில் இந்தியா அதன் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும் இந்திய பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப் படுத்தவும் இலங்கையில் அமையும் எதிர்கால அரசாங் 02

## பொதுச் செயலாளர் தெரிவு இரகசியக் கூட்டமும் தோல்வி

(வவுனியா)

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவு தொடர்பில் சர்ச்சைகள் ஏற்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் தீர்மானம் எட்டுவதற்காக வவுனியாவில் இடம்பெற்ற இரகசிய கலந்துரை 15

## இடமாற்றத்தால் மனவிரக்தி கலாசார உத்தியோகத்தர் உயிர்மாய்ப்பு

(சுழிபுரம்)

பணி இடமாற்றம் காரணமாக ஏற்பட்ட மனவிரக்தியால், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கலாசார அபிவி 15

## பாணின் விலை அதிகரிக்கப்படலாம்? பேக்கரி உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

ஒரு இறாத்தல் பாணின் விலை 170 ரூபாயாக அதிகரிக்கப்படலாம் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்த்தன தெரிவித் 15

## கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு செங்கலடியைச் சேர்ந்த உதய 15

## மோ.சைக்கிள் மோதி ஒருவர் உயிரிழப்பு


(புலோலி)

கொடிகாமம் கச்சாய் - புலோலி பிரதான வீதியில் மாக்கிராய் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பளையில் இருந்து கொடிகாமம் ஊடாக பருத்தித்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், எதிரே நெல் பரவிக் 15

## ரணில் ராஜபக்ஷக்களின் காவலன் மக்களால் நிராகரிக்கப்பட்டவருடன் எம்மால் இணைந்து செயற்பட முடியாது

### அநுர குமார திட்டவட்டம்



(கொழும்பு)

மக்கள் ஆணை இல்லாத தலைவரின் அழைப்பை ஏற்பதற்கு நாம் தயாரில்லை. மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வரும் தலைவர்களுடன்தான் நாம் பேச்சு நடத்துவோம்.

ரணில் விக்கிரமசிங்க என்பவர் ராஜபக்ஷக்களின் காவலன் மாத்திரமே என 15

## ஜெனிவா கூட்டத் தொடர் இம்மாத இறுதியில் ஆரம்பம்

### அறிக்கை தயாரிக்கிறது இலங்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடர் இம்மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரின் போது இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்கள் தொடர்பில் மார்ச் மாதம் 4ஆம் திகதி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Hybrid International Hub(pvt) ltd**

கனடா, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான
விசிட் விசா மற்றும் வேலை விசாக்கள்
தேவைப்படுபவர்கள் இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

**Hybrid International Hub(pvt) ltd**
யாழ்ப்பாணம்
**021 222 1265, 076 250 0098,**
**077 815 5920**
(C-8329)

உ
முருகமயம்

## நனி நன்றி

அன்பெனும் அணிபூண்டு அரன் பணியாற்றிய எம் தாய்
அமரர் சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாண முதலியார்,
கந்தனழியில் குகபதம் அடைந்த வேளை வருகை தந்து,
துயர் துடைத்து, ஆறுதல்கூறித் தேற்றிய,
அன்புள்ளங்களுக்கும் உறவினர்களுக்கும்
அனுதாபச் செய்திகள்
அனுப்பியவர்களுக்கும், தெரிவித்தவர்களுக்கும்,
இணையங்கள், ஊடகங்கள் வாயிலாகவும்
இதய அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும்,
பல்வேறு உதவிகளை உணர்வுடன் ஆற்றியவர்களுக்கும்
இறுதிக்கிரியைகளை வழிநடத்திய பெருமக்களுக்கும்,
ஆறுதல் கூறி அஞ்சலி தெரிவித்த சிவாச்சாரியார்களுக்கும்,
இறுதி ஊர்வலத்திலும், தகனக்கிரியையிலும்
கலந்துகொண்டஅன்பர்களுக்கும் நண்பர்களுக்கும்
"உங்களது மாசற்ற அன்பையும், சேவையினையும்,
பங்களிப்பினையும்
நீளநினைந்து, நவில்கின்றோம்"

## நனி நன்றி.

முருகா சரணம்!

குமாரதாஸ் மாப்பாணர் குடும்பம்,
மாப்பாணர் வளவு – நல்லூர் – யாழ்ப்பாணம்
12.02.2024
(இ)

## இலங்கையின்...

களின் பங்களிப்பும் அவசியமாக உள்ளது.

இந்நிலையில் கடந்த சில தசாப்தங்களில் இல்லாத வகையில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் இந்தியா அதன் முதலீடுகளை அதிகரித்து வருகிறது.

இலங்கையில் அடுத்து அமைய உள்ள அரசாங்கத்தை தமக்கு ஆதரவான அரசாங்கமாக மாற்றிக்கொள்ளும் தேவையின் பிரகாரமே இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக சந்தோஷ் ஜா நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஆளுங்கட்சியை போன்று எதிர்க்கட்சிகளுடனும் வலுவான உறவுப்பாலத்தை உருவாக்கும் பொறுப்பு இவருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே, இலங்கைத் தீவுக்கு வருகை தந்து குறுகிய காலத்துக்குள்ளேயே இராஜதந்திர மட்டத்தில் உறவுகளை வலுப்படுத்தும் முயற்சிகளில் அவர் ஈடுபட்டுள்ளார்.

ஜே.வி.பி எனப்படும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களை இந்தியாவுக்கு அழைத்துச் செல்லும் பணியில் முக்கிய பங்கை சந்தோஷ்ஜா வகித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியும் இந்தியாவின் அழைப்பை கண்டுகொள்ளாது விட்டமை குறித்து கவலையடைந்துள்ளது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு புதுடில்லி அழைப்பு விடுத்துள்ளதுடன் தொடர்ந்து தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவின் பிரசன்னத்தை இலங்கையில் குறைக்க டில்லி வகுத்துள்ள இந்த வியூகங்கள் குறித்து சீனா தனது இராஜதந்திரிகள் ஊடாக இலங்கை அரசாங்கத்துடன் விரைவில் நேரடியான கலந்துரையாடல்களை நடத்தும் நகர்வுகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (ந-7)

# இந்திய கட்டண முறைமை இலங்கையில் அறிமுகம்

இந்தியாவின் UPI என்ற ஒருங்கிணைந்த கட்டணம் செலுத்தும் முறைமை இன்று முதல் இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணையவழிமுறையின் ஊடாக கொழும்பில் இதனை அறிமுகப்படுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

UPI என்ற ஒருங்கிணைந்த கட்டணம் செலுத்தும் முறைமை பல வங்கிக் கணக்குகளை, ஒரே தொலைபேசி செயலி ஊடாக இணைக்கும் அமைப்பாகும். இந்த கட்டண முறையானது தொலைபேசிகள் மூலம் வங்கிகளுக்கு இடையேயும் மற்றும் தனிப்பட்ட வர்த்தக பரிவர்த்தனைகளை எளிதாக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-7)

மகளிர்க்கான பயிற்சி வழங்குதலில்
26 ஆண்டுகள் கடந்த பயணத்தில்
உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்

பெப்பிரவரி **16**
வெள்ளி காலை
10 மணிக்கு
ஆரம்பமாகும்
பயிற்சிகளில்
கலந்து
கொள்ளுங்கள்



1997 -2024
(C-8334)

ஆடை வடிவமைப்பும் தையலும்,
உடைகளில் அலங்காரம் அச்சிடல்,
அழுக்கலையும் அலங்காரமும்,
கேக் தயாரித்தலும் ஐசிங் அலங்கரிப்பும்,
கூந்தல் அழகு படுத்தலும் பராமரிப்பும்
ஆரி எம்ராய்ட்டரி வேலைப் பயிற்சி
ஓவியம், கைப்பணி பயிற்சிகள்.....

விரும்பியதை தேர்ந்தெடுங்கள்....
குறுங்கால பகுதி நேரப் பயிற்சிகளின்
பின் சான்றிதழ்களும் வழங்கப்படும்

"வாழ்வை வளம்படுத்திக் கொள்ளும்
சந்தர்ப்பங்களை நழுவ விடாதீர்கள்"

**தூரிகை**
**நுண்கலை வளாகம்**
**நெல்லியடி**

பயிற்சிகள், சலுகைகள்,
இலவச பயிற்சிகள், செய்முறைப் பயிற்சிகள்
பயிற்சிப் பட்டறைகள் போன்ற
சகல விபரங்களையும்
நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளலாம்

அலுவலக தொடர்புகள்
**077 525 9954,**
**077 914 3171**

# மரண அறிவித்தல்

பிறப்பு
1953 - 06 - 09



இறப்பு
2024 - 02 - 10

## வரப்பிரகாசம் அன்ரனி (திரவியம்)

**(ஓய்வுபெற்ற ஊழியர் - யாழ்.பல்கலைக்கழகம்)**

இத்தாவில் பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வரப்பிரகாசம் அன்ரனி (திரவியம்) அவர்கள் (ஓய்வுபெற்ற ஊழியர் யாழ்.பல்கலைக்கழகம்) கடந்த 10.02.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம் - ஞானப்பு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருளப்பு - கிறிஸ்ரினேசு தம்பதிகளின் அன்பு மருமகனும் செபஸ்ரியம்மா (பூவதி) அவர்களின் அன்புக் கணவரும் திவ்யன் (வவுனியா பல்கலைக்கழக முகாமைத்துவ உதவியாளர்), டன்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானப்பிரகாசம், விக்ரர் பேபி, காலஞ்சென்ற தயாபரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் றுக்மணி, மேரி, ஜெயமோகன், ஞானமலர், பேதுருப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இத்தாவில் புனித பார்பரம்மா ஆலயத்தில் இன்று (12.02.2024) மதியம் 2 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் அன்னாரின் பூதவுடல் இத்தாவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


இத்தாவில்,
பளை.

(18980)

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
1947 - 09 - 23



மறைவு
2024 - 02 - 09

## இராசையா துரைசிங்கம்

யாழ்ப்பாணம் ஊரெழுவை(கிழக்கு) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா துரைசிங்கம் அவர்கள் 09.02.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகசபை - மாணிக்கம்(மண்டைதீவு) தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் மற்றும் அமரர் சிவசுப்பிரமணியம்(சிவம்), அமரர் யோகரட்ணம், அமரர் ஜெகநாதன் மற்றும் ஸ்ரீமகேந்திரராஜா ஜெகதீஸ்வரி, பாலகிருஷ்ணன் மகேஸ்வரி, செல்வராயா ராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (12.02.2024) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியை ஊரெழு பொக்கணை இந்து மயானத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(C-8333)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைய பாதுகாப்பு சட்டம் தொடர்பான ஐ.நாவின் ஆலோசனைகள் எதிர்மறையானவை

## நீதியமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் ஆலோசனைகள் மற்றும் செயற்பாடுகள் எப்போதும் எதிர்மறையானவை என்பதால் அவற்றைப் பின்பற்றவேண்டிய அவசியம் எமக்கில்லை என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**




கொழும்பில் ஆங்கில ஊடகமொன்றிற்கு வழங்கிய விசேட நேர்காணல் ஒன்றில் இணையப்பாதுகாப்புச் சட்டம் தொடர்பான கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் ஆலோசனைகளை செவிமடுக்க வேண்டிய அவசியமில்லை.

அத்துடன், அவர்களின் செயற்பாடுகளின் மூலம் சாதகமான விளைவுகள் எதுவுமில்லை என்றும் அவர்களின் செயற்பாடுகள் எப்போதும் எதிர்மறையானவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், சிவில் சமூகத்தினர் சில சட்டங்களை மாற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளதால் நாங்கள் எங்கள் சமூகத்தினருடன் மட்டுமே கலந்துரையாடுவோம். மாறாக சர்வதேச நிபுணர்களுடன் அல்ல எனவும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# அயோத்தியில் ராமரை தரிசித்த நாமல்



(டில்லி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அயோத்தி ராமர் கோவிலுக்கு தரிசனம் செய்வதற்காக இந்தியா சென்றுள்ளார்.

இந்நிலையில் ராமர் கோவிலில் அவருக்கு சிறப்பு பூஜைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதேவேளை, உத்தரப் பிரதேசத்தில் தங்கியிருந்த நாமல் ராஜபக்ச லக்னோவில் மரியாதை நிமித்தமாக முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் துணை முதல்வர் பிரிகேஷ் பதேக் ஆகியோரை சந்தித்தார். (நி)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி



(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இடம்பெற்ற 7ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொள்ள சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியுள்ளார்.

அதன்படி ஜனாதிபதி நேற்று முன்தினம் இரவு கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அரசாங்கத்தை ஆதரிக்கப் போவதில்லை

## தேர்தல் தொடர்பில் கம்மன்பில

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என பிவித்துரு ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

அதேநேரம், ஜனாதிபதி தேர்தலில் தான் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பான முடிவை இதுவரை மேற்கொள்ளவில்லை எனவும் கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியலமைப்புக்கு அமைய எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதிக்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

குறித்த தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் இலங்கையில் நடைபெறவிருந்த தேர்தல்களை தனக்கு ஏற்ற விதத்தில் ஒத்திவைத்திருந்ததாக அவர் நினைவூட்டியுள்ளார்.

எனினும், இலங்கையின் வரலாற்றில் இதுவரை ஜனாதிபதித் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டதில்லை எனவும் இதற்கமைய இந்த ஆண்டு நடைபெற வேண்டிய தேர்தல் உரிய நேரத்தில் நடைபெறுமெனவும் உதய கம்மன்பில தெரிவித்தார். (நி)

# கட்சி தாவத் தயாராகும் சரத் பொன்சேகா

## அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா ஆளும் கட்சியில் இணையத் தயாராக இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கருத்து வேறுபாடு கொண்டுள்ள தம்மை கட்சியின் பதவிகளில் இருந்து நீக்குமாறு அவர் கட்சித் தலைவரிடம் ஏற்கனவே யோசனை முன்வைத்துள்ளார்.

அத்தோடு சஜித் பிரேமதாஸவும் பல சந்தர்ப்பங்களில் சரத் பொன்சேகாவின் பெயரைக் குறிப்பிடாமல் ஒருவர் கட்சியை விட்டு வெளியேற விரும்புவராக இருந்தால் வெளியேறலாம் என்றும் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அண்மையில் இரண்டு முன்னாள் இராணுவத் தளபதிகள் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைத்துக் கொள்



ளப்பட்டமை தொடர்பில் பொன்சேகா மிகுந்த கவலையடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதன் பின்னர் சரத் பொன்சேகா அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எவ்வாறாயினும் பொன்சேகா அது தொடர்பில் கூறுகையில் இலங்கையின் நிதியமைச்சு தொடர்பில் பேசுவதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றத்தில் சந்தித்ததாக தெரிவித்துள்ளார். (நி)

## ஆசிரியர்களுக்கான அன்பளிப்பு தொடர்பில்

# பணம் வசூலிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை -சுசில்

(கொழும்பு)

ஆசிரியர்களுக்குப் பரிசுப் பொருட்களை வாங்க பணம் வசூலிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களுக்கு அன்பளிப்பு வழங்குவதை தடைசெய்து சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ள போதிலும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்வதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் இவ்வாறு பரிசுகளை பெறுவதும் தவறு என கல்வி அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி



யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நாவாந்துறை சென்நீக்கிலஸ் விளையாட்டு கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி சென்நீக்கிலஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரையிறுதி போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் அணி மோதியது.

ஆரம்பம் முதல் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆடிய இரு அணிகளும் எதிரணி கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தன. ஆனாலும் கோல் எதுவும் பெறப்படாமல் முதல் பாதியாட்டம் முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதியாட்டம் ஆரம்பத்தில் இரு அணிகளும் புது உத்வேகத்துடன் ஆடின. கோல் பெறும் சந்தர்ப்பங்கள் இரு அணியின் பின்கள வீரர்கள் மற்றும் இரு அணியின் கோல் காப்பாளர்களாலும் தடுக்கப்பட்டன.

இதனால் இரண்டாம் பாதியாட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது. இதனால் ஆட்ட நேர முடிவில் கோல்கள் ஏதுமின்றி சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

போட்டியின் ஆட்டநாயகனாக கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி வீரர் ஆர்நிகன் தெரிவு செய்யப்பட்டார். (நி-90)

# இங்கிலாந்துக்கு எதிரான கடைசி 3 டெஸ்ட் போட்டி

## விராட்கோலி விலகல்



இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 5 ஆட்டம்கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

ஐதராபாத்தில் நடந்த முதல் டெஸ்டில் இங்கிலாந்து 28 ரன்கள் வித்தியாசத்திலும் விசாகப்பட்டினத்தில் நடந்த 2 ஆவது டெஸ்டில் இந்தியா 106 ரன்கள் வித்தியாசத் திலும் வெற்றி பெற்றன. இதனால் 1-1 என்ற கணக்கில் தொடர் சமனில் உள்ளது.

இதற்கிடையே, 3 ஆவது டெஸ்ட் போட்டி ராஜ்கோட்டில் வரும் 15 ஆம் திகதி தொடங்குகிறது. 4 ஆவது டெஸ்ட் ராஞ்சியில் 23 ஆம் திகதியும் கடைசி டெஸ்ட் மார்ச் 7 ஆம் திகதியும் நடைபெறும்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் முதல் 2 போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் தனிப்பட்ட காரணங்களுக்காக முன்னணி விராட் கோலி விலகி இருந்தார்.

இந்நிலையில், இங்கிலாந்துக்கு எதிராக எஞ்சியுள்ள 3 டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்பட்டது. இதில் விராட் கோலி மற்றும் ஷ்ரேயஸ் அய்யர் இடம்பெறவில்லை.

காயம் காரணமாக 2 ஆவது டெஸ்டில் விளையாடாத லோகேஷ் ராகுல், ஜடேஜா ஆகியோர் அணிக்கு திரும்பி உள்ளனர். அதே வேளை யில் இருவரும் போட்டியில் விளையாடுவது குறித்து மரு த்துவ குழுவின் உடற்தகுதி அறிக்கை அடிப்படையில் முடிவு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகாஸ்தீப் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3039


### சுலக்ஷன்




### சிவரஞ்சனா




### தரிஷ்




### கவி




### பாமினி




### அன்ரன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுடன் கைதாகும் நபரின் சொத்துகள் அரசுடைமையாக்கப்படும்

## பதில் பொலிஸ்மா அதிபர்



(கொழும்பு)

போதைப்பொருள் அற்ற நாட்டை இன்னும் ஒன்றரை மாதத்துக்குள் உருவாக்குவோம். எதிர்காலத்தில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி இரண்டு மாதங்கள் சிறையில் வைத்திருந்து வெளியில் அனுப்பும் முறைமையை இல்லாமல் செய்வோம். அதற்கு பதிலாக போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு, உழைத்த அவரது அனைத்து சொத்துக்களையும் அரச உடைமையாக்கும் முறையை நடைமுறைப்படுத்துவோம் என பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (நி)

# 20 சதவீதத்தால் குறைவடைந்த எரிபொருள் விற்பனை

(கொழும்பு)

இலங்கையில் விலை உயர்வால், எரிபொருள் விற்பனை சுமார் 20 சதவீதம் குறைந்துள்ளதாக ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலித்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வற் வரி காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கூட்டுத்தானத்திற்கு சொந்தமான நிரப்பு நிலையங்களுக்கான தரகு பணம் 2.75 சதவீதமாகும் மற்ற நிரப்பு நிலையங்களுக்கு கிடைக்கும் தரகு பணம் 2.95 சதவீதமாகும். இந்த தரகு பணத்தில் இருந்து நிரப்பு நிலைய உரிமையாளர்கள் வருமான வரி மற்றும் பிற செலவுகளை ஈடு கட்டுகின்றனர்.

பெற்றோலிய கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து நில வாடகை மற்றும் விற்பனை வாடகை என மாதம் ஒன்றுக்கு 18 லட்சத்திற்கு மேல் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வசூலிக்கிறது.

கடந்த சில நாட்களாக ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட 35 சதவீத தரகு தொகையை வசூலிக்கும் முயற்சிக்கு பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் எரிபொருள் மீது விதிக்கப்பட்ட வற் வரியை பெற்றோல் நிலைய உரிமையாளர்களிடம் இருந்து வசூலிக்க பெற்றோல் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

12 ஆண்டுகளுக்கு முன்பு வரை, பிரதிநிதித்துவ நிரப்பு நிலையங்கள் உட்பட அனைத்து நிரப்பு நிலையங்களும் பெற்றோலியம் சட்டபூர்வ நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வந்தது. நிரப்பு நிலையங்களை நவீனப்படுத்துவதற்கு வட்டியில்லா கடன்களும் வழங்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையினால், விரைவில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இந்தியாவின் அழைப்பின் பேரில் மைத்திரி டில்லி விஜயம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த வாரம் இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக சுதந்திரக் கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதுடில்லிக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர், சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களைச் சந்திப்பதற்காக அவர் அமெரிக்கா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)



# சர்வதேச யோகா போட்டியில் தங்கம் வென்றார் உமாசுதன்



இந்திய தேசிய யோகா கூட்டமைப்பு ஆசிய யோகா சம்மேளனம் மற்றும் கொழும்பு சைவ விஷ்ணு யோக பீடமும் இணைந்து சர்வதேச யோகா போட்டியை கொழும்பில் நடத்தியிருந்தது. இப்போட்டியில் யாழ்.யோகா உலகம் அமைப்பின் நிறுவுநரும் யோகா போதனாசிரியருமாகிய சி.உமாசுதன் பாடப் பரப்புக்குட்பட்ட யோகா பிரிவில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை,இந்தியா, பாகிஸ்தான், மலேசியா முதலான நாடுகளிலிருந்து போட்டியாளர்கள் யோகா போட்டிகளில் பங்கேற்றனர் யோகா போதனாசிரியர் உமாசுதன் பல்வேறு அமைப்புக்கள் சார்ந்து யோகப்பணியை வட மாகாணத்தில் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கோடா மற்றும் கசிப்புடன் பண்டிவிரிச்சானில் இருவர் கைது

(வவுனியா)

மடு, பண்டிவிரிச்சான் பகுதியில் விசேட அதிரடிப் படையினரின் விசேட சுற்றிவளைப்பின் போது நேற்று முன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மடு பொலிஸார் தெரிவித்தனர்.

மடு, பண்டிவிரிச்சான் காட்டுப் பகுதியில் 1000 லீற்றர் கோடா மற்றும் 35 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன், அதனை உடமையில் வைத்திருந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும், மீட்கப்பட்ட பொருட்களுடன் மடு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-250)

# இராசிபலன்

12.02.2024
தை 29, திங்கட்கிழமை
திருதியை முன்னிரவு 10.57 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 7.42 மணி வரை

சுபநேரம் -12.34-2.04 மணிவரை
இராகுகாலம்-8.04-9.34 மணிவரை

சந்திராஷ்டமம்
பூசம்,ஆயிலியம்.

வளவன்


மேஷம்

தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.


கடகம்

சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, பயணங்கள் கைகூடும்.


துலாம்

தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடிவரலாம்,செய் தொழில் மேன்மையுண்டு, சுப செய்திகள் வந்துசேரலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், காரிய அனுகூல முண்டு.


மகரம்

பிரபலங்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சேமிப்பல் அக்கறை காட்டுவீர்கள், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.


ரிஷபம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள்.


சிம்மம்

வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்,கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம் பெறலாம்.


விருச்சிகம்

தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்,பணத்தேவைகள் திருப்தி தரும், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.


கும்பம்

இல்லத்தில் இன்பங்கள் கூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.


மிதுனம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


கன்னி

குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.


தனுசு


பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.


மீனம்

குடும்பத்தினரிடையே முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ்விப்பதில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நயினாதீவு படகுத்துறை ஆலடி வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நேற்று சிறப்பாக நடைபெற்றது. (படங்கள்- சிவசாந்தன்)

# இழப்பீடுகளை விரைந்து பெற்றுத் தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாண்டு கால போகத்தில் ஏற்பட்ட நெற் பயிர் அழிவுகளுக்கான இழப்பீடுகளை விரைவாக பெற்றுத் தருவதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாண்டு கால போக பயிர்ச் செய்கையில் மழை வெள்ளம் பயிர்களை மூடிப் பாய்ந்தமை, நோய் அழிவுகள், யானைகளினால் ஏற்பட்ட அழிவுகள், கால்நடை பாதிப்புகள் என பல்வேறு வழிகளில் பயிர்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன.

அறுவடையில் கூட எதிர் பார்த்த அளவு விளைச்சல் கிடைக்கவில்லை. இந்நிலையில் அழிவுகளை மதிப்பீடு செய்வதற்கு அதிகாரிகள் உரிய காலங்களில் வயல்களுக்கு வரவில்லை. இதனால் இழப்பீடுகள் கிடைப்பதில் தாமதங்கள் உருவாகும்.

இழப்பீடுகளை பெற்றுத் தருவதற்கு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேவேளை அறுவடை செய்யப்பட்ட நெல்லிற்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. நெல்லினை உலர விடுவதற்கு போதியளவு தளங்கள் இல்லாததன் காரணமாக முதன்மை வீதிகளில் நெல்லினை உலர விடுவதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடுகள் கிடைப்பதன் மூலமே எதிர் காலத்தில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கான சூழல் உருவாகும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். (நி-350)

# இலவச சித்த மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்திய துணைத் தூதரகமும் வடமாகாண சுதேச மருத்துவமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இலவச சித்த மருத்துவ முகாம் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை யா/ சிதம்பராக் கல்லூரி வல்வெட்டித்துறையில் நடைபெறும். (நி-33)

# நீண்டகாலம் புனரமைக்கப்படாத தட்டாங்குளம் பிள்ளையார் வீதியை புனரமைக்கும் பணிகள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

சுமார் 18 வருடங்களாக புனரமைக்கப்படாத யாழ்ப்பாணம் கொடிகாமம் தட்டாங்குளம் பிள்ளையார் வீதியை புனரமைக்க வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சாள்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கிராம மக்களிடமிருந்து கிடைத்த கோரிக்கைக்கு அமைய சுமார் 2.34 கிலோ மீற்றர் வீதியை புனரமைப்பு செய்வது தொடர்பில் உள்ளூராட்சிமன்ற ஆணையாளருக்கு ஆளுநர் அறிவுறுத்தினார்.

அதற்கமைய சாவகச்சேரி பிரதேசசபையினால் வீதி புனரமைப்பிற்கான மதிப்பீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் கொடிகாமம் தட்டாங்குளம் பிள்ளையார் வீதியை முழுமையாக புனரமைக்க 42 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

குன்றும், குழியுமாக காட்சியளிக்கும் இந்த வீதியானது மழைக்காலங்களில் வெள்ளத்தால் மூடப்படும்.

இதனால் குறித்த வீதியை புனரமைப்பு செய்து தருமாறு கொடிகாமம், மீசாலை வடக்கு இராமாவில் கிராம மக்கள், வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

# நீர்வேலியில் உப தபாலகம் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் உப தபாலகத்திற்கு புதிய நிரந்தரக் கட்டடம் அமைப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கட்டடமானது யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் வீதிக்கு அருகாமையில் உள்ள காணியில் அமைக்கப்பட்டுள்ளதுடன் இந்த உப தபாலகம் அமைப்பதற்கு நீர்வேலி மத்தியைச் சேர்ந்த கந்தசாமி கிருபாகரன் தனது சொந்தக் காணியை தந்து உதவியுள்ளதுடன் அவரது நிதிப் பங்களிப்புடன் உப தபாலக கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த உப அலுவலகக் கட்டடத்துடன் ஆறுமுக நாவலர் சிலை, சிவசங்கர பண்டிதர் சிலை, அரச கேசரி மன்னன் ஆகியோரின் சிலைகளும் அமைக்கப்பட்டு தமிழ் முற்றம் என்ற பெயருடன் சிலைகளும் திறந்து வைக்கப் (நி-33)

# மதுபோதையில் சாரத்தியம் அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தம்

(தருமபுரம்)

கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் மதுபோதையில் வாகனம் செலுத்திய நான்கு பேருக்கு ஒருஇலட்சத்து எண்பத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதி அனுமதி பத்திரங்களும் ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வரிப் பத்திரம், காப்புறுதி பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்களுக்கே இவ்வாறு தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் பி.ஆர்.ஜ ஜெமில் முன்னிலையில் குறித்த நபர்களை ஆஜர் படுத்தியபோது இவ்வாறு தண்டப்பணங்கள் விதிக்கப்பட்டு சாரதி அனுமதிப் பத்திரங்களும் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (நி-316)



தமிழ்த்தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் 34நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற நாவல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்- தேவானந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 350 | 400 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 150 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 900 | 1100 | 1000 | 1000 | 1000 |
| தக்காளி | 800 | 700 | 800 | 1000 | 655 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 120 | 150 | 120 |
| கோவா | 600 | 500 | 500 | 600 | 600 |
| கரட் | 800 | 1000 | 800 | 1000 | 1000 |
| பூசணி | 260 | 280 | 200 | 300 | 225 |
| புடோல் | 200 | 200 | 200 | 250 | 350 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 300 | 250 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 300 | 350 | 200-300 |
| பெரிய வெங்காயம் | 320 | 350 | 400 | 350 | 350-500 |
| பாகற்காய் | 500 | 400 | 500 | 600 | 610 |
| வெண்டக்காய் | 600 | 500 | 300 | 600 | — |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 | — |
| பயற்றங்காய் | 400 | 500 | 500 | 600 | 650 |
| லீக்ஸ் | 450 | 450 | 500 | 600 | 550 |
| பீற்றூட் | 400 | 350 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 900 | 800 | 1200 | 700 |
| முருங்கைக்காய் | — | 3000 | 1500 | 1200 | 1500 |
| போஞ்சி | 400 | 400 | 450 | 800 | 500 |
| கத்தரிதம்புள்ள | 400 | 200 | 300 | 360 | — |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 100 | 100 | 60-100 |
| தேசிக்காய் | 150 | 200 | 250 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 100 | 70-110 | 70-90 |
| இராசவள்ளி | 420 | 400 | 350 | 500 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 300 | 350 | 210 |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 | 140 |
| வல்லாரை | 60 | 250(கட்டு) | 40 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 | 110 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீனவர்களை விடுதலை செய்யக்கோரி தமிழகத்தில் பாரிய போராட்டம்



(சென்னை)

இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்படும் மீனவர்கள் தொடர்பாக மத்திய அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க வில்லை என மத்திய அரசுக்கு எதிராக மீனவர் காங்கிரஸ் சார்பில் தமிழகத்தின் பாம்பன் பேருந்து நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.


குறித்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்தினர் மற்றும் ராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்கத் தலைவர்கள், மீனவர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்யக்கோரியும் மீனவர் கைதுக்கு எந்த விதமான நடவடிக்கை எடுக்காமல் மத்திய அரசு மௌனம் காப்பதால் உடனடியாக மத்திய அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக சமீபகாலமாக தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 60 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன், கடந்த வாரம் இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த சுமார் 30 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படை கைது செய்து சிறையில் அடைத்துள்ளதாகவும் போராட்டக்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# சர்வதேச ஆதரவு மாற்றத்திற்கு அவசியம்

## இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய பின் அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் விரும்பிய மாற்றத்தை அடைவதற்கான சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவதே தமது நோக்கமாகும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பியதும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா பிராந்தியத்தில் வளர்ந்து வரும் நாடாகவும் தகவல் தொழில்நுட்பத் துறையில் நிபுணத்துவம் பெற்ற நாடாகவும் விளங்குகிறது.

எனவே இலங்கை அந்த நாட்டிடம் இருந்து ஆதரவைப் பெற முடியும்.

76 ஆண்டு கால அழிவுகரமான அரசியல் கலாசாரத்தை நாம் நிறுத்த வேண்டும். மக்கள் அதிக எதிர்பார்ப்புகளை கொண்டுள்ளனர்.

அந்த மாற்றத்தை ஏற்படுத்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த எதிர்பார்ப்புக்கு தலைமைத்துவத்தை வழங்கி நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே தமது நோக்கமாகும். அதற்கு சர்வதேச ஆதரவு தேவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு சில துறைகளில் மூலதனமும் தொழில்நுட்பமும் தேவை. சந்தையை விரிவுபடுத்த சில நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும்.

உலகில் தனிமைப்படுத்தப்பட்ட நாடாக இருப்பதன் மூலம் நமது இலக்குகளை அடைய முடியாது. எனவே, உறவுகளை வலுப்படுத்துவதே தமது இலக்கு என்று அவர் தெரிவித்துள்ளார். (நி)

# இதய நோயாளர்கள் இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பிராந்திய ரீதியாக பதிவாகும் இதய நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்ற நிலைமைகளே இதற்குக் காரணம் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலியில் வைத்திய நிலையமொன்றின் நிகழ்வில் கலந்துகொண்டபோது சுகாதார அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி)



# நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் முதலாவது கைது-டிரான் அலஸ்

(கொழும்பு)

சமூக ஊடகங்களில் அவதூறான விடயங்களை பரப்பி வந்த நபர் ஒருவரைக் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பாணந்துறை பிரதேச சமூக காவல் குழு உறுப்பினர்களுக்கு கல்வி கற்பிக்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

தவிரவும் கைது செய்யப்பட்ட போது குறித்த நபரிடம் சுமார் நான்கு இலட்சம் ரூபாய் வரை இருந்ததாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் சந்தேக நபர் ஒரு அரசியல்வாதியின் ஆதரவுடன் தீங்கிழைக்கும் வகையிலான அவதூறு பிரசாரங்களை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.


இதன் காரணமாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அரசியல்வாதி ஒருவர் தனக்கு பணம் கொடுத்ததாகவும் அதன் பின்னரே அவர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி இணையத்தில் அவதூறாகப் பேசியதாகவும் குறித்த சந்தேக நபர் கூறியுள்ளார்.

இந்நிலையில், இலங்கை ரூபாவிற்கு டொலர்களை மாற்றுவதற்காக கோட்டைக்குச் சென்றபோதே இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் இடம்பெற்ற முதலாவது கைதாக இது பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)


CJ PROMTERS & ரேனுகா பந்தல் நடாத்தும்

CARNIVAL



(18953)

இடம்: யாழ்.முற்றவெளி மைதானம்.

காலம்: February 13 தொடக்கம் 18 வரை

கடைத்தொகுதிகளுக்கு, விளம்பரப்படுத்தல்களுக்கு, அனுசரணையாளர்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

(கடைகளுக்கான ஏலத் திகதி 12.02.2024 மாலை 6 மணிக்கு)

தொடர்புகளுக்கு:


0772546511, 0775002840



பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.தி.ரவீந்திரா



செல்வி.தி.நிஷாந்தினி


31.01.2024 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணி பட்டத்தைப் பெற்ற இருவரையும் அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- பெற்றோர், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## விண்வெளியில் ஆய்வு மையம் அமைக்கும் முயற்சியில் இந்தியா



(டில்லி)
விண்வெளியில் ஆய்வு நிலையமொன்றை அமைக்கும் முயற்சியில் இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ முழுமூச்சாக இறங்கியுள்ளது.

மேலும் இவ்வாறு அமைக்கப்படவுள்ள ஆய்வு மையமானது எதிர்வரும் 2035 ஆம் ஆண்டுக்குள் செயற்பாட்டுக்குள் வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளியில் ஏற்கனவே அமெரிக்கா, ரஷ்யா, கனடா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி நிலையமொன்றை உருவாக்கியுள்ளன.

அத்துடன் சீனாவும் தனியாக ஒரு விண்வெளி நிலையத்தை அமைத்துள்ள நிலையில் தற்போது இந்தியாவும் குறித்த பட்டியலில் மூன்றாவதாக இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நெடுஞ்சாலையில் வீழ்ந்து நொருங்கிய விமானம்

### அமெரிக்காவில் சம்பவம்



(வோஷிங்டன்)
அமெரிக்காவில் 5 பேர் பயணித்த சிறிய ரக விமானமொன்று நெடுஞ்சாலையில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விமானம் அமெரிக்காவின் ஓகையோ மாநில பல்கலைக்கழக விமான நிலையத்தில் இருந்து புளோரிடா விமான நிலையத்தை நெருங்கும் போது இரு எஞ்சின்களும் செயலிழந்தமையால் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தினால் விமானத்தில் பயணித்த ஐவரில் இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு கட்டுப்பாட்டை இழந்த அந்த விமானம், நேபிள்ஸ் நகர இன்டர்ஸ் டேட்-75 நெடுஞ்சாலையில், பைன் ரிட்ஜ் சாலை பகுதியில் வீழ்ந்து நொருங்கி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில், விபத்து தொடர்பில் தேசிய போக்குவரத்து பாதுகாப்பு வாரியமும், மத்திய வான்வழி போக்குவரத்து நிர்வாகமும் இணைந்து விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றன. (நி)

## பாகிஸ்தான் பாராளு

# பெரும்பான்மை

# ஆட்சி அமைப்

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானில் நடைபெற்ற பாராளு**
**பெரும்பான்மை பெறவில்லை.ஆட்சி**
**நீடிக்கும் நிலையில் 50 இற்கும்**
**மறுவாக்கும் பதிவும் நடத்தப்படவுள்**

பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தல் கடந்த 8 ஆம் திகதி நடந்தது. அதைத் தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை உடனே தொடங்கினாலும் அனைத்து தொகுதிகளுக்கான முடிவுகள் இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இதற்கிடையே வாக்குப்பதிவின் போது பல இடங்களில் வாக்குச்சீட்டு, வாக்குப்பெட் டிகள் சேதப்படுத்தப்பட்டன. இவ்வாறு சேதம் அடைந்த வாக்குச் சாவடிகள் குறித்து தகவல் சேகரித்து வருகிறது தேர்தல் ஆணையம். மேலும் தகவல் தெரிவிக்கவும் வலியுறுத்தியுள்ளது.

அதன்படி சுமார் 50 இற்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவு நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை வந்ததாக தெரிகிறது. அதனடிப்படையில் வருகிற 15 ஆம் திகதி மறுவாக்குப்பதிவு நடைபெறும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அனைத்து இடங்களுக்கான முடிவுகள் விரைவில் அறிவிக்கப்பட வேண்டும். இல்லையெனில் போராட்டம் நடத்தப்படும் என இம்ரான் கான் கட்சி தெரிவித்திருந்தது. நேற்று காலை வரை சுமார் 10 தொகுதிகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. அதனால் அறிவித்தபடி




அக்கட்சியினர் போராட்டம் நடத்தினர்.

265 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடந்த நிலையில் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்கள் அதிக இடங்களில் முன்னிலை பெற்றதாக தெரிவித்தனர். தேர்தலில் தாங்கள் வெற்றி பெற்று உள்ளதாக அந்த கட்சியினர் அறிவித்தனர்.

மேலும் தேர்தல் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுத்தப்படுவதாக குற்றம் சாட்டினர். ஆனால் தேர்தலில்

## சீனாவில் புத்தாண்டு நிகழ்வுகள் ஆரம்பம்



(பீஜிங்)
சீனாவில் மிக முக்கிய

மாக கருதப்படும் சீன புத்தாண்டு நிகழ்வுகள்

ஆரம்பமாகியுள்ளது.

இந் நிலையில் அந்த நாட்டு மக்கள் தங்கள் குடும்பத்தினர், உறவினர்களோடு இணைந்து கொண்டாட்டங்களில் பங்கேற்றனர்.


இதேவேளை சீன நம்பிக்கையின் அடிப்படையில் 12 விலங்குகள் ஆண்டுகளின் பெயராக ஒவ்வொரு ஆண்டும் மாறும்.

அதன் அடிப்படையில் இந்த ஆண்டு டிராகன் ஆண்டாக கொண்டாடப்படுகிறது

அத்துடன் சீன மக்கள் இந்தாண்டில் குழந்தைகளைப் பெற்றுகொள்ள விரும்புவர். டிராகன் போலவே பலம், ஆற்றல் மற்றும் வெற்றி கிடைக்கும் என்கிற நம்பிக்கை நிலவுகிறது.

சீனாவின் வசந்த கால தொடக்க நாளான புத்தாண்டு, சீனாவில் மட்டு மல்லாமல் ஹாங்காங், தென்கொரியா, வியட்நாம், மியான்மர், மலேசியா மற்றும் இந்திய தர்மசாலாவில் உள்ள திபெத் துறவிகள் வரை இந்த புத்தாண்டு கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஆளில்லா வி
## 3 குழந்தைகள்



(கீவ்)
உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஆளில்லா விமான தாக்குதலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.


உயிரிழந்தவர்களில் மூன்று குழந்தைகளும் உள்ளடங்குவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. தாக்குதல் காரணமாக 14 வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்தின் பின்னர் வீடுகளில் தங்கியிருந்த மக்களை ...ளுக்கு உக்ரை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ளுமன்ற தேர்தல் ...ம இல்லாததால் ...பதில் இழுபறி

...ளுமன்ற தேர்தலில் எந்தக் கட்சியும் ...ட்சி அமைப்பதில் தொடர்ந்து இழுபறி ...ம் மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் ...வுள்ளது.



தனது கட்சிதான் வெற்றி பெற்றதாக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்தார்.

255 இடங்களுக்கு முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் பாகிஸ்தான்-தெஹ்ரீப்-இ-இன்சாப் (பிடிஐ) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்கள் 101 இடங்களை பெற்று முதலிடத்தில் உள்ளனர். நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி 73 இடங்களிலும் பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 இடங்களிலும் வெற்றி பெற்று உள்ளன. 27 இடங்களில் சிறிய கட்சிகள் வெற்றி பெற்றன.

ஆட்சி அமைக்க 133 இடங்கள் தேவை என்கிற நிலையில் எந்த கட்சியும் பெரும்பான்மை பெறவில்லை. இதனால் ஆட்சியை அமைப்பதில் தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது.

அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய ஒற்றுமை அரசை அமைக்க நவாஸ் ஷெரீப் அழைப்பு விடுத்து உள்ளார். மேலும் அவரது கட்சி பாகிஸ்தான் மக்கள் கட்சி உள்ளிட்ட பிற கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. நவாஸ் ஷெரீப்-பிலாவல் பூட்டோவின் கட்சிகள் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்க இன்னும் அவர்களுக்கு 6 இடங்கள் தேவைப்படுகிறது.

ஆனால் நவாஸ் ஷெரீப் கட்சியுடன் அதிகார பூர்வமாக இன்னும் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தவில்லை என்று பிலாவல் பூட்டோ தெரிவித்தார்.

இதற்கிடையே சுயேட்சை வேட்பாளர்களை தங்கள் பக்கம் இழுக்கும் முயற்சிகள் நடந்து வருகிறது. 3 சுயேட்சை வேட்பாளர்கள் நவாஸ் ஷெரீப் கட்சிக்கு ஆதரவு தெரிவித்து உள்ளனர். நவாஸ் ஷெரீப்புக்கு பாகிஸ்தான் ராணுவம் ஆதரவு உள்ளதாக கூறப்படுகிறது. (நி)

# பதவி துறந்தார்
## ஹங்கேரிய ஜனாதிபதி



(ஹங்கேரி)

துஷ்பிரயோக வழக்கில் சிக்கிய நபருக்கு பொது மன்னிப்பு வழங்கிய விவகாரத்தால் ஹங்கேரிய ஜனாதிபதி தனது பதவியிலிருந்து விலகியதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

கடந்த வெள்ளிக் கிழமையன்று ஹங்கேரி மக்கள் ஒன்று திரண்டு ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் எதிர்க் கட்சிகளும் ஜனாதிபதியை பதவி விலக வேண்டும் என்று அழுத்தம் கொடுத்துள்ளனர்.

ஐரோப்பிய நாடான ஹங்கேரியில் சிறுவர் துஷ்பிர யோக வழக்கில் சிக்கிய நபருக்கு அந்நாட்டு ஜனாதிபதி கடலின் நோவாக் பொது மன்னிப்பு வழங்கிய விடயமானது பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் வேறு வழியின்றி தனது பதவியிலிருந்து ஜனாதிபதி கடலின் நோவாக் விலகியுள்ளார்.

46 வயதான கடலின் நோவாக் பொதுமன்னிப்பு விவகாரத்தில் தாம் தவறிழைத்ததாக குறிப்பிட்டு பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். அத்துடன் தமது செயல் பாதிக்கப்பட்டவர்களை காயப்படுத்தியிருக்கும் என நம்புகிறேன் என்றும் அதற்காக மன்னிப்பு கோருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாட்டின் முதல் பெண் ஜனாதிபதியாக கடலின் நோவாக் பொறுப்புக்கு வந்தார்.

இதன்போது சிறுவர் காப்பகங்களுக்கான முன்னாள் துணை இயக்குநர் ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்கியதே தற்போது அவரது ஜனாதிபதி பதவியினை பறிக்கும் அளவிற்கு கொண்டு சேர்த்துள்ளது.

குறித்த முன்னாள் துணை இயக்குநர் தமது மேலதிகாரியின் சிறுவர் துஷ்பிரயோக விவகாரத்தை மூடிமறைக்க உதவியதாக இருந்த காரணத்திற்காக கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. கடந்த ஆண்டு (2023) ஏப்ரல் மாதம் குறித்த முன்னாள் துணை இயக்குநருக்கு ஜனாதிபதி கடலின் நோவாக் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். ஆனால் இந்த விடயம் கடந்த வாரம் தான் பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ளது.

இதனையடுத்தே பொது மக்கள் மற்றும் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்த நிலையில் ஜனாதிபதி கடலின் நோவாக் தனது பதவியிலிருந்து விலகி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



# ...மான தாக்குதலால் ...ள் உட்பட 7 பேர் பலி



...ள பாதுகாப்பான இடங்க...க்கு அழைத்துச் செல்ல ...ரைன் பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# காசாவில் இஸ்ரேல் கொடூரத் தாக்குதல்
## குழந்தைகளின் உயிரிழப்பிற்கு உலக நாடுகள் கண்டனம்



(இஸ்ரேல்)

காசாவின் ரஃபா நகரத்தின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 10 குழந்தைகள் உள்ளிட்ட 28 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. [illegible] எகிப்தின் எல்லையில் அமைந்துள்ள ரஃபா நகரத்தில் ஹமாஸ் அமைப்பினர் பதுங்கியிருப்பதாகவும் அப்பிரதேசங்களை இலக்கு வைத்து வான்வழி மற்றும் தரைவழித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் என்பதால் அங்குள்ள பொது மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அண்மையில் அறிவித்திருந்தார்.

எனினும் காசாவில் பெரும்பாலானவர்கள் போர் காரணமாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளதுடன் அவர்களில் அதிகமானவர்கள் தெற்கு காசாவில் உள்ள ரஃபா நகரத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இதுவரை 28 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளதாக, காசாவின் சுகாதாரத் துறை அமைச்சு அறிவித்திருக்கும் நிலையில், பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் கண்டனம் வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# ஆல்

**Botanical Name- Ficus bengalensis**
**Family- Moraceae.**

ஆலமரத்தின் பூக்களைக் கொண்டது. இதன் இளங்காய்களாகும். இது உருண்டை வடிவிலானது. சதைப்பற்றுள்ளது. உட்கூடு உடையது. உட்கூட்டின் ஓரங்களில் மலருடன் உண்டாகும். மலர்களில் மகரந்தச் சேர்க்கை நிகழ்ந்த பின் இக்காய்கள் முதிர்ந்து பழங்களாகும். ஆலமரத்தின் இலை, பழம், விழுது, பால், பூ அனைத்தும் மருத்துவ குணம் மிக்கவை.



இதன் விழுதைக் கொண்டு பல் துலக்க பல் இறுகும். இதனால் தான் ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்பர். ஆலம் பழுப்பு இலையைச் சுட்டு சாம்பலாக்கி நல்லெண்ணெயில் கலந்து நீர்வடியும் கரப்பான் தோல் நோயிற்கு பூசலாம். ஆலம் பழுப்பு இலையை அரிசிப் பொதியோடு சேர்த்து குடிநீரிட்டு குடிக்க தோல் நோய்கள் நீங்கும். வியர்வை உண்டாகும். ஆலம் பட்டையை குடிநீரிட்டு வாய் கொப்பளித்துவர வாய்ப்புண், வாய் நாற்றம், நாவெடிப்பு இவை நீங்கும். விரணங்களைக் கழுவவும் இதனைப் பயன்படுத்தலாம். ஆலம் பட்டையை இடித்து 10 மடங்கு நீர்விட்டு ஒன்றாக ஊற வைத்து குடித்துவர நீரிழிவு நீங்கும். ஆலமரப்பூக்களை காயவைத்து, பொடியாக்கி காலையில் 2 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் கர்ப்பப்பை பலப்படுவதோடு மலட்டுத்தன்மை ஏற்படவும் வாய்ப்புக் குறைவாகும்.

ஆலமர விழுதை இடித்து, தேங்காய் எண்ணெயில் காய்ச்சி அந்த எண்ணெயை தினமும் தலையில் தேய்த்து வந்தால் முடி உதிர்வது நிற்கும்.

ஆலமரப் பட்டையை உலர்த்தி பொடி செய்து 1-2 கிராம் அளவை பனை வெல்லத்துடன் காலை, மாலை எடுத்துவர வெள்ளை சாய்தல் நீங்கும்.

ஆலமர பழங்களை உலர்த்தி பொடி செய்து 1-2 கிராம் அளவு பனங்கட்டியுடன் காலை, மாலை சாப்பிட்டு வர மூலநோய் குணமாகும். ஆலமர பழங்களை நிழலில் உலர்த்தி பொடி செய்து 2 கிராம் அளவு எடுத்து 200 மில்லி காய்ச்சிய பசுவின் பாலில் கலந்து குடித்து வர ஞாபகசக்தி அதிகரிக்கும். ஆலமரப் பட்டையை எரித்து அதன் சாம்பலை அரித்து புண்கள் மீது தடவினால் அவை விரைவில்ஆறும்.




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஆலமர இலைகளை எரித்து, ஆழி விதை எண்ணெயில் குழைத்து சொட்டை விழுந்த இடத்தில் தடவினால் அங்கு விரைவில் முடி முளைக்கும். ஆலமரத்துப் பாலை உதட்டுப் புண்கள் மீது தடவி வந்தால் அவை விரைவில் ஆறும். ஆலமர மொட்டுக்களை நிழலில் உலர்த்தி பொடி செய்து 2 கிராம்அளவு காலை, மாலை ஆடை நீக்கிய பாலில் குடிக்க இடுப்பு வலி குறையும். ஆலமரத்தின் இளம் பிஞ்சு வேர்களுடன் செம்பருத்தி பூவையும் சேர்த்துக் காயவைத்து இடித்து பொடி செய்து தேங்காய் எண்ணெயில் போட்டு ஊறவைத்து தலையில் தேய்த்துக் கொண்டால் முடி கறுப்பாக வளரும்.

ஆலமர விதைகளையும் கொழுந்து இலைகளையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்து காய்ச்சிய பசுவின் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் தாய்ப்பால் அதிகமாகச் சுரக்கும்.

ஆலமர இலைகளை பொடி செய்து 2 கிராம் அளவு எடுத்து வெண்ணெயில் கலந்து சாப்பிட்டு வர மாதவிலக்கு கோளாறுகள் நீங்கும். ஆலமர விழுதை உலர்த்தி பொடி செய்து 2 கிராம் அளவு காலை, மாலை தூய தேன் கலந்து சாப்பிட்டு வர நாட்பட்ட இருமல் தணியும்.

ஆலமரத்தின் அடிப்பாகத்தில் உள்ள சொரசொரப்பான பாகத்தை கத்தியால் சுரண்டி எடுத்துவிட்டு உள்ளே இருக்கும் பட்டையை



தேவையான அளவு வெட்டி, இதே போல் ஆலமரத்தின் வேர்ப்பட்டையையும் வெட்டி ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து அம்மியில் வைத்து நைத்து, ஒரு புதிய மட்கலத்தில் 200 மில்லி தண்ணீர் விட்டு ஒன்றாக கலக்கி ஓர் இடத்தில் பாதுகாப்பாக வைத்துவிட வேண்டும்.

இதை முதல்நாள் காலையில் செய்து வைத்து மறுநாள் காலையில் இந்நீரை மட்டும் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். உடனே அதில் மீண்டும் 200 மில்லி தண்ணீரை விட்டு மூடி வைக்க வேண்டும். இதே போல் மூன்று நாட்கள் குடித்த பின்னர் நான்காம் நாள் புதிய பட்டைகளை போட்ட தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிட்டுவர நீரிழிவு நோய் முற்றிலும் கட்டுப்[illegible]

## இன்று ஒரு தகவல் 34



தென்கச்சி கோசுவாமிநாதன்

# காப்பி குடிக்கலாமா?

வாங்க சார்... ஒரு காப்பி குடிச்சிட்டு போகலாம்!

யாரைப் பார்த்தாலும் இப்படி சகஜமாக சொல்லிக் கொண்டு இருக்கிறோம். ஒருத்தரை உபசரிக்கணும் என்று நினைத்தால் உடனடியாக நாம் செய்வது காப்பி குடிக்க சொல்வது தான்.

இதனாலே காப்பி குடிக்க வேண்டாம் என்று நினைக்கிறவங்க கூட ஒரு கட்டாயத்துக்காக குடிக்க வேண்டி இருக்கு.

காப்பி அதிகமாக குடிப்பது கெடுதல் தான். அதனால் அதனை அளவோட நிறுத்தி கொள்வது நல்லது. நாம் குடிக்கிற காப்பியில் காஃபீன் என்னும் நச்சுப் பொருள் உள்ளது. இது ஐந்து நிமிடத்திலே உடல் பூராகவும் பரவி விடும் . ஒருநாளில் 300 இல் இருந்து 350 மில்லி கிராம் காஃபீன் நம்ம உடம்புக்குள்ள போச்சுது என்றால் அது நம்மை காப்பி பழக்கத்திற்கு அடிமையாக்க கூடிய அளவு என்று அர்த்தம்.

நமக்கே தெரியாமலே நாம் காப்பி பழக்கத்திற்கு அடிமையாகி இருப்போம். அதனை எப்படி கண்டுபிடிப்பது தெரியுமா? ஒரு இரண்டு, மூன்று நாட்கள காப்பி குடிப்பதை நிறுத்துங்க. என்ன ஆகிறது என்று பாருங்க.

அந்த சமயத்தில் உங்களுக்கு அடிக்கடி எரிச்சல் வருகிறதா? கொட்டாவி வருகிறதா? தூக்க மயக்கமாக இருக்கிறதா? தலைவலி வருகிறதா? அடிக்கடி உணர்ச்சி வசப்படுகிறீர்களா? கோபத்தை அடக்க முடியலையா? அப்படி என்றால் அதிகமாக நீங்கள் காஃபீனுக்கு அடிமையாக இருப்பீர்கள்.

ஒரு நாளைக்கு மூன்று தொடக்கம் நாலு வேளை காப்பி குடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் காஃபீனிசம் என்னும் கோளாறுக்கு ஆளாகக்கூடும்.

அது எப்படிப்பட்ட கோளாறு என்றால் மனதில் ஒரு ஏக்கம் இருக் கும், அமைதி இருக்காது, இரவு வேளையிலே தூங்க முடியாது,அதிக நேரம் கழித்து தான் தூங்க முடியும். அல்லது தூக்கம் கெட்டுப் போய்விடும். உங்களுக்கு தூங்குவதில் சிரமம் இருக்கா? தலை வலியோ, உடல் நடுக்கமோ இருக்கா? அப்படி என்றால் காப்பியை குறைக்கிறது நல்லது. கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து கொண்டே வந்து விடலாம்.

தலை வலிக்கிறது காப்பி குடித்தால் சரியாகிவிடும் என்று சொல்லுகிறோம் அல்லவா? தலை வலித்தால் காப்பி குடிப்பதற்கு பதிலாக அதை நிறுத்துவது நல்லது. காப்பி குடிக்கும் பழக்கமே அடிக்கடி தலைவலி வருவதற்கு காரணம் என்று சில ஆராய்ச்சி முடிவுகள் சொல்கிறது.

வயிற்றுப்புண் உள்ளவங்க காப்பி குடிப்பதை நிறுத்துவது தான் நல்லது. ஒரு சில நடத்தைக் கோளாறுகளுக்கும் அள்வுக்கு மீறிய செயற்பாடுகளுக்கும் காஃபீன் காரணமாக இருக்கும் என்று சிலர் சொல்லுவார்கள். அது இன்னமும் நிரூபிக்கப்படவில்லை.

கருவுற்ற பெண்கன் அதிகமாக காப்பி குடித்துக்கொண்டு இருந்தால் கருச்சிதைவு, உதடு பிளந்த குழந்தைகள் உருவாகின்றன. கை ஊனத்தோட உருவாகுவது இது மாதிரி சில கோளாறுகள் ஏற்படலாம்.

அதுக்காக காப்பி அதிகமாக குடித்தால் கண்டிப்பாக இப்படி ஆகிவிடும் என்று யாரும் நினைக்க வேண்டாம். இப்படி ஆகுவதற்கு சந்தர்ப்பம் உண்டு என்று சொல்லுவாங்க அவ்வளவு தான்.

வழக்கம் போல எலிகளை வைத்து ஆராய்ச்சி பண்ணி பார்த்து இப்படி சொல்லுறாங்க.

சில எலிகளுக்கு தினமும் காப்பி கொடுத்து பார்த்தார்கள். காப்பி என்றால் நாம் குடிக்கும் காப்பியையே கொடுத்து குடிக்க சொல்லுவது இல்லை.

நாம் குடிக்கும் 18 குவளை காப்பியில் எவ்வளவு காஃபீன் இருக் குமோ அவ்வளவு காஃபீனை தினமும் எலிக்கு கொடுத்துக்கிட்டு வந் தாங்க. கடைசியிலே அதெல்லாம் ஊனமுற்ற குட்டிகளாக போட்டுதாம்.

அதனாலே தேவைக்கு அதிகமாக அல்லது அநாவசியமாக குடிக்கிற காப்பியை குறைத்துக் கொள்ளலாமே. அது நல்லது தானே. அதுக்காக தான் இந்த தகவல். என் கூட வேலை பார்க்கும் ஒருத்தர் மாலை ஐந்து மணி ஆகியதும் அவசரமாக வீட்டுக்கு புறப்படுவார்.

ஏன் இவ்வளவு அவசரமாக செல்கிறீர்கள் என்று கேட்பேன்.

என் சம்சாரம் எனக்காக காப்பியை குடிக்காமல் காத்துக்கொண்டு இருப்பார் என்று கூறுவார்.

உங்களுக்கு அவ்வளவு மரியாதையா என்று கேட்பேன்! அப்படி இல்லை சார் நான் போய் தான் காப்பி போட்டு குடித்து விட்டு அவளுக்கும் கொடுக்க வேண்டும் என்று கூறுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த வருடம் கிளிநொச்சியில்
# 423 வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடத்தில் 423 வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ச.நிலாந்தன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் குறிப்பிடுகையில், கடந்த வருடம் (2023) ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் நடவடிக்கைகளின் போது கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப் படையில் கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் 423 வியாபார நிறுவனங்களின் மற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டு விலைகளை விட அதிகூடிய விலைகளிலே பொருட்களை விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப் படாமை, பொருட்களின் விலைகளில் மாற்றங்களை செய்து விற்பனை செய்தமை, அனுமதிக்கப்படாத முகப்பூச்சு கிறீம்களை விற்பனை செய்தமை, விற்பனைக்காக காட்சிப்படுத்தியமை, எடை குறைந்த பாண் விற்பனை, முத்திரையிடப்படாத இலத்திரனியில் பொருட்களை விற்பனை செய்தமை என பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் 423 பேருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வாறு கடந்த வருடத்தில் நிலுவையாக இருந்த வழக்குகள் உட்பட 433 வழக்குகளுக்கு சட்ட நடவடிக்கைகளின் பின்னர் 35 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் நீதிமன்றால் அபராதமாக விதிக்கப்பட்டது என்றும் தெரிவித்த அவர் பாவனையாளர்கள், பொது மக்கள் இது தொடர்பான முறைப்பாடுகளை தங்களுக்கு நேரடியாகவோ அல்லது 1977 என்ற இலக்கத்தின் ஊடாகவோ முறைப்பாடுகளை செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார். (நி-316)

## தர்ம மண்டபம் பல்கலையில் திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் அமைந்துள்ள பௌத்த விகாரைக்கு அருகில் தர்ம மண்டபம் நேற்று திறந்து திறந்துவைக்கப் பட்டுள்ளது.

இத் திறப்பு விழா நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் பிரதி துணைவேந்தர், பீடாதிபதிகள், மதத் தலைவர்கள், பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டுள்ளார்கள். (நி-316)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்ற வாகனத்தை பறிமுதல் செய்த பொலிஸார்



(முல்லைத்தீவு)

அனுமதிப் பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற குற்றத்திற்காக டிப்பர் வாகனத்தையும் அதன் சாரதியையும் கைது செய்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார் டிப்பர் வாகனத்தை வழிமறித்து சோதனை மேற்கொண்ட போதே அனுமதிப் பத்திரமின்றி கிரவல் மணல் ஏற்றி சென்றமை தெரியவந்துள்ளது.

இரண்டு டிப்பர் வாகனத்தினதும் சாரதி கைது செய்யப் பட்டுள்ளதுடன், டிப்பர் வாகனத்தினையும் பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபர்களையும் வாகனத்தையும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-299)

## யானைகளைக் கட்டுப்படுத்துமாறு ஸ்கந்தபுரம் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள விநாயகர் குடியிருப்பு, 2 ஆம் வாய்க்கால் கிராமங்களுக்குள் வருகை தரும் யானைகளை கட்டுப்படுத்துமாறு கிராம மக்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இப் பகுதிகளில் வயல் நிலங்களில் நுழைந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தியதன் தொடர்ச்சியாக தற்போது குடிமனைகளுக்குள் புகுந்து தென்னை, வாழை போன்ற பயன்தரு மரங்களை யானைகள் நாள்தோறும் அழித்து வருகின்றன.

கிராம அலுவலரிடம் தொடர்ச்சியாக பொதுமக்களினால் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. கரைச்சி பிரதேச செயலாளர் இப் பகுதிகளில் யானைகளை கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக யானை வெடிகளை பெற்றுக் கொடுப்பதுடன் நிரந்தரமாக யானை வேலி அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இப் பகுதி மக்களின் கோரிக்கையாகும்.

ஆனைவிழுந்தான், முக்கொம்பன் காடுகளின் வழியாகவே யானைகள் குடிமனைகளுக்குள்ளும் வயல் நிலங்களுக்குள்ளும் வருகை தருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (நி-350)

## வவுனியாவில் வயல் விழா



(வவுனியா)

வவுனியா, கலசியம்பௌலவ பகுதியில் வயல்விழா நிகழ்வும் வர்த்தக ரீதியிலான வீட்டுத் தோட்ட செய்கை தொடர்பான நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இதன்போது பாரசூட் முறையில் நெற்செய்கை செய்யும் முறை மற்றும் அம்முறையினை எவ்வாறு செய்வது தொடர்பாக செய்முறை விளக்கங்கள் விவசாய போதனாசிரியர்களால் வழங்கப்பட்டது.

மேலும் இம்முறை மூலமாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயலினை விருந்தினர்கள் மற்றும் விவசாயிகள் பார்வையிட்டதுடன், வர்த்தக நோக்கில் பயிரிடப்பட்ட வீட்டுத்தோட்ட செய்கையினையும் பார்வையிட்டனர்.

வவுனியா பிரதி விவசாய பணிப்பாளர் பி.அற்புதசந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகு, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் மற்றும் விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-250)

## தேவிபுரம் பாடசாலை சூழலில் பெற்றோர்கள் சிரமதானம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு தேவிபுரம் பாடசாலை சூழலில் கிராம மக்களினால் நேற்றுக்காலை சிரமதான பணி முன்னெடுக்கப் பட்டது.

பாடசாலை ஆரம்பித்துள்ள நிலையில் பாடசாலை சூழலில் காணப்படுகின்ற புற்கள், சிறிய பற்றைகளை துப்புரவு செய்து பாடசாலை சூழலில் டெங்கு அபாயம் இல்லாது ஒழிக்கும் நோக்குடன் மக்களினால் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 403





இங்கே தாங்கள் வந்தது, போனது, இங்கே நடந்தது எதையும் பற்றி வெளியில் யாருக்கும் சொல்லக் கூடாது. தங்களுடைய நண்பர்களும் சொல்லக்கூடாது. சொன்னால் மிகக் கடுமையான தேவ சாபத்துக்கு உள்ளாகும்படி நேரிடும்!"

"அத்தியட்சக! சாபத்துக்குத் தேவையில்லை வெளியில் யாருக்கும் சொல்வதில்லையென்று வாக்குக் கொடுத்து விட்டுத்தான் இங்கே என் நண்பர்களையும் அழைத்துக்கொண்டு வந்தேன். கொடுத்த வாக்கை ஒரு நாளும் மீறமாட்டேன்." என்றார் பொன்னியின் செல்வர்.

அரைநாழிகை நேரத்துக்குப் பிறகு இளவரசர் அருள்மொழிவர்மரும், ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் அநுராதபுரத்தின் வீதியில் நிலா வெளிச்சத்தில் நடந்து கொண்டிருந்தார்கள். விஹாரத்துக்குள் இருந்த வரையில் வாயைக் கெட்டியாக மூடி வைத்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன் இப்போது அடக்கி வைத்திருந்த எண்ணங்களையெல்லாம் அவிழ்த்து விட்டான்.

"சோழ நாடு! நீர்வளம் நிலவளம் பொருந்தியதுதான். ஆனால் இந்த இலங்கைக்கு இணையாகாது. இப்படிப்பட்ட இரகசியத் தீவின் சிம்மாசனம் வலிய வந்ததை உதைத்துத் தள்ளிவிட்டீர்களே! இது என்ன பேதைமை? தங்களை அழைத்து மணிமகுடத்தை வழங்க வந்த பிக்குக்களின் மதியை என்ன வென்று சொல்ல? அடுத்தாற்போல், நானும் தூணோடு தூணாக நின்றுகொண்டிருந்தேனே? எனக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?" என்று இப்படியெல்லாம் பொருமிக் கொட்டிக் கொண்டிருந்தான்.

இளவரசர் அவனைச் சமாதானப்படுத்த முயன்றார். "துஷ்டகமனுவின் மகன் ஸாலி அசோகமாலா என்னும் பெண்ணின் காதலுக்காக இந்த இலங்கை ராஜ்யத்தைத் துறந்தானென்று சொன்னேனே? அது உமது காதில் ஏறவில்லையா?" என்றார்.

"எல்லாம் ஏறிற்று. அப்படித் தாங்கள் எந்தப் பெண்ணைக் காதலிக்கிறீர்கள்? அவ்விதம் தாங்கள் சிம்மாசனம் ஏறுவதற்குக் குறுக்கே நிற்கும் பெண் யார்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"ஒரு பெண் அல்ல இரண்டு பெண்கள். சத்தியம், தர்மம் என்னும் இரு பெண்களை நான் காதலிக்கிறேன். அவர்களுக்காகவே இலங்கை மணிமகுடத்தை வேண்டாம் என்றேன்."

"இளவரசே தங்களைப் பார்த்தால் இளம் பிராயத்தினராக காணப்படுகிறது. பேச்சோ, வயதான கிழவரைப் போல் பேசுகிறீர்கள்."

"நம்மில் யார் வயதானவர், யாருடைய பிராயம் முடியப்போகிறது என்பது யாருக்குத் தெரியும்?"

இப்படி அவர்கள் பேசிய போது வீதியின் ஓரமாக ஒரு பழைய மாளிகையின் சமீபம் போய்க் கொண்டிருந்தார்கள்.

வீதிக்கு எதிர்ப் புறத்தில் யாரோ கையைத் தட்டும் சப்தம் கேட்டது. சப்தம் கேட்ட இடத்தில் ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது.

"இப்படி வாருங்கள்!" என்று கூறி, இளவரசர் அந்த உருவத்தை நோக்கி வீதியைக் கடந்து போனார்.

மற்றவர்களும் தொடர்ந்து போனார்கள். அவர்கள் பாதி வீதியைக் கடந்து கொண்டிருந்தபோது பின்னால் பெரிய தடபுடல் சத்தம் கேட்டது திரும்பிப் பார்த்தார்கள். அவர்கள் எந்த வீட்டின் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தார்களோ அதன் மேல் மாடத்தின் முகப்பு இடிந்து விழுந்து கொண்டிருந்தது!

அவர்கள் அங்கே வீதியைக் கடக்கத் திரும்பியிராவிட்டால் அவர்கள் தலைமேலே விழுந்து கொன்றிருக்கும்!

ஒரு கண நேர வித்தியாசத்தில் மூன்று உயிர்கள் பிழைத்தன. அதுவும் எப்பேர்ப்பட்ட உயிர்கள்!

(தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## கால் ஓழந்த கொக்கு

(நேற்றைய தொடர்ச்சி)

ஏழைக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்தத் தங்க நாணயங்களை

எல்லாம் எடுத்துத் தன் விருந்தாளிகளுக்கு பங்கிட்டுக் கொடுத்தான். அவர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வீடு சென்றனர். முலாம் பழங்கள் ஒவ்வொன்றிலும் பத்துப் பத்து முலாம் பழங்கள் கனிந்தன. அவை அனைத்'திலுமிருந்தும் தங்க நாணயங்கள் கிடைத்தன. ஏழை பெரிய பணக்காரனாகி விட் டான்.



பக்கத்தில் ஒரு செல்வந்தன் வசித்து வந்தான். அவன் இந்தக் குடியானவனிடம் வந்து, நீ எப்படி இவ வளவு பெரிய பணக்காரனாக வந்தாய் என்று கேட்டான்.

முன்பு மிக ஏழையாக இருந்த அந்த நல்ல மனிதன் நடந்த விஷயம் முழுவதையும் பணக்காரனிடம் கூறினான்.

சரி,நமக்கும் கிடைக்குமா பார்க்கலாம் என்று தனக்குள் சொல்லிக் கொண்டுஅந்தப் பேராசைக்காரன் தனதுகழனியை நோக்கிப் போனான். அந்தக் கொக்குஅவன் பார்வையில் பட்டது, அதற்குத் தெரியாமல் வஞ்சகத்தனமாகஒருகம்பை எடுத்து அதன் காலை ஒடித்து விட்டான். பிறகு அந்தக் கொக்குக்குச் சிகிச்சை செய்ய அதைத் தன் வீட்டுக்குக் கொண்டு போனான்.

சிலநாட்களில் கொக்கு குணமடைந்து பறந்துபோய் விட்டது. அந்தப் பணக்காரன் தன் கழனிக்குப் போய் அந்தக் கொக்கை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள்,அந்தக் கொக்கு பறந்து வந்து இரண்டு விதைகளைப் போட்டது. அந்த விதைகள் முளைத்து விட்டன. கொடி படர்ந்து வளர்ந்து முலாம் பழங்கள் பழுத்தன.

அது கண்ட அந்தப் பணக்காரன் தன் நண்பர்களையும் உறவினர்களையும் தன் வீட்டுக்கு அழைத்தான். ஆனால் அவன் அந்தமுலாம் பழங்களை நறுக்கிய போது, அதிலிருந்து கூட்டம் கூட்டமாகத் தேனீக்கள் கிளம்பின.

ஒவ்வொன்றும் ஒரு கொட்டைப் பாக்கு அளவு பெரியதாக இருந்தது. அவை அந்தப் பணக்காரனையும் அவனது உறவினர்களையும் கன்னம், உதடு, கண்ணிமை எல்லாம் வீங்கிப் போகும் வரை கொட்டிவிட்டன.

ஆனால் இந்த இரக்கமுள்ள நல்ல மனிதன் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான். பேராசை பிடித்த தன் அண்டை வீட்டுக்காரனைஎண்ணிஅவன் நகைத்தான்.(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எதைச் செய்தாலும் தெளிவு, அறிவு மற்றும் அன்போடு செய்ய வேண்டும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அயோத்தி சென்ற நாமல் ராஜபக்ஷ இராமரும் அனுமரும் கதைத்தது என்ன?

அயோத்தி இராமர் கோவிலுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ சென்றிருந்தார்.

ஆலயங்களுக்கு யார் வேண்டுமானாலும் செல்லலாம் என்பதால், அதுபற்றி நாம் வியாக்கியானம் செய்யவில்லை.

ஆனால் நாமல் ராஜபக்ஷ அயோத்தி இராமர் கோவிலுக்குச் சென்றபோது, இராமபிரான் என்ன நினைத்திருப்பார் என்று கற்பனை செய்தோம்.

நாமல் ராஜபக்ஷ அயோத்தி இராமர் கோவிலுக்குள் காலடி எடுத்து வைத்ததும் அனுமர் மெல்லிதாகச் சிரித்திருப்பார்.

அந்தச் சிரிப்பு மூலமூர்த்தியாக இருக்கின்ற இராமருக்கு ஒரு முக்கிய தகவலை வழங்கியிருக்கும்.

அவர்கள் தங்களுக்குள் உரையாடியிருப்பர்.

**இராமர்:** அனும! தங்கள் சிரிப்பின் காரணம் யாதோ?

**அனுமன் :** அதோ! இலங்கையிலிருந்து நாமல் உங்களைத் தரிசிக்க வருகிறார். அதுதான்...

**இராமர் :** யார் வந்தாலும் தாங்கள் சிரிப்பதில்லையே.

**அனுமன் :** சுவாமி ஒருமுறை இலங்கையை எரியூட்டியவன் நான். நான் எரியூட்டியும் அழியாத இலங்கை இப்போது கந்தறுந்து காவடி எடுக்கிறது. உலகம் முழுவதும் கையேந்துகிறது. என்னால் செய்ய முடியாததை செய்து காட்டியவர் வரும்போது தன்னை அறியாமல் சிரிப்புவரத்தானே செய்யும்.

**இராமர் :** இல்லை அனும! உம் சிரிப்பில் பல அர்த்தங்கள் தெரிகின்றன. எதையும் மறைக்காமல் சொல்வதுதானே சொல்லின் செல்வருக்கு அழகு.

**அனுமன் :** சுவாமி போர்க்களத்தில் இலங்கை வேந்தன் இராவணன் வெறுங்கையோடு நிற்கின்றான். அவ்விதம் வெறுங்கையோடு நின்ற இராவணனைப் பார்த்து நீங்கள் இன்று போய் போர்க்கு நாளை வா என்று அனுப்பி வைத்தீர்கள்.

**இராமர் :** அதற்கும் இப்போது நீவிர் சிரிப்பதற்கும் என்ன தொடர்பு.

**அனுமன் :** சுவாமி வெறுங்கையோடு நிற்பவரைக் கொல்வது யுத்த அறமன்று என நீங்கள் இலங்கை மண்ணில் வைத்து உபதேசித்தீர்கள்.

ஆனால் 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடிய யுத்தத்தின் போது வெள்ளைக் கொடியுடன் வருமாறு கூறிவிட்டு, அவ்வாறு வந்தவர்களை அந்த நாட்டுப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

தவிர, வெறுங்கையோடு நின்றவர்கள் படையினரின் அறுவுறுத்தலுக்கு அமைய அவர்களிடம் சரணடைந்தனர்.

ஆனால் அவ்வாறு சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை. அந்தக் கொடுமை நடந்தபோது இலங்கையின் ஆட்சியில் இருந்தவர் இவரின் தந்தை. அப்போது இவர் இளம் அமைச்சர். இவரின் சிறிய தந்தை பாதுகாப்புச் செயலாளராக இருந்து, போரில் ஈடுபட்ட படையினருக்கு கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

**இராமர் :** அதற்கும் தங்கள் சிரிப்புக்கும் உள்ள தொடர்பு.

**அனுமன் :** நிராயுதபாணியைக் கொல்லக்கூடாது என்று இலங்கை மண்ணில் வைத்து நீங்கள் உபதேசித்த அந்த அறத்தைப் பின்பற்ற முடியாதவர்கள் உங்களைத் தரிசிக்க வருவதை நினைத்தபோது சிரிப்பு வந்தது.

**இராமர் :** அப்படியா!

**அனுமன் :** சுவாமி அன்று நீங்கள் இலங்கையில் ஆட்சியை அமைத்திருந்தால், ஈழத் தமிழ் மக்கள் இத்துணை அவலம் அடைந்திருக்க மாட்டார்கள் அல்லவா!

**இராமர் :** விட்ட தவறை எண்ணி வருந்துகிறேன். எனக்கு ஆலயம் அமைத்த மோடியுடன் கதைத்துப் பார்க்கலாம். நான் விட்ட தவறை நீவிர் விடாதீர் என்று. பாலம் அமைத்து, தரை வழிப்பாதை சமைத்து ஒன்றாக்குக! என்று கூறுகிறேன். போதுமா அனும!

# இணையம் சார் வன்முறைகளை தடுக்கும் சட்டம் தேவையாகவுள்ளது

## யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கருத்து

நிறைவேற்றப்பட்ட இணையப் பாதுகாப்புச் சட்டம் மீளப் பெறப்பட்டு, பரந்துபட்ட மட்டத்தில் கலந்துரையாடலுடனான புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே எமது விருப்பம் என யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன் தெரிவித்துள்ளார்.

"இணையப் பாதுகாப்புச் சட்டம் - பிரயோகமும் விளைவுகளும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் சிறப்புப் பேச்சாளராக கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே கோசலை மதன் இவ்வாறு தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இணையப் பாதுகாப்புச் சட்டத்தினுடைய முறையற்ற தன்மையை கேள்விக்கு உட்படுத்துவதற்கான அரசியலமைப்பு ரீதியான வாய்ப்புகள் இலங்கை உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்படுமா என்பதை நாங்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டி இருக்கிறது.

அதேநேரம் இணையத்தில் இடம்பெறக்கூடிய வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்காக அல்லது அதன் மூலம் பாதிக்கப்படுகின்ற மக்களை பாதுகாக்க வேண்டியதான ஒரு தேவைப்பாடு நிச்சயம் இலங்கையில் இருக்கின்றது.

இந்த இணையம் சார் வன்முறைகள் கட்டுக்கடங்காமல் இடம்பெற்று வரும் சூழ்நிலையில் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு பிரத்தியேக சட்டத்தை நாங்கள் உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

அதில் யாருக்கும் மாற்று கருத்து இருப்பதற்கான வாய்ப்பில்லை. ஆனால் இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டத்தை உருவாக்குகின்ற போது பரந்துபட்ட மட்டத்தில் கலந்துரையாடல்களை செய்து, வெளிநாட்டில் உள்ள நடைமுறைகளை ஒப்பிட்டு ஆராய்ந்து சட்டத்தை நிதானமாகவும் தெளிவான தன்மையிலும் உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

நாடாளுமன்றத்தின் ஊடாக அதன் அரசியலமைப்புத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டு முறையான நடைமுறைகளைப் பின்பற்றி ஒரு இணையப் பாதுகாப்புச் சட்டம் சரியான தன்மையில் உருவாக்கப்படுமாகஇருந்தால்இணைய வன்முறைகளை மிக வினைத்திறனாகக் கட்டுப்படுத்த முடியும்.

அதற்கான வாய்ப்புகள் அரசியல் மற்றும் சட்டப் பரப்பிலே உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் எமது விருப்பமாக இருக்கின்றது" என யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

# நாட்டில் காற்றின் தரம் மிகவும் குறைந்துள்ளது

## அவதானமாக செயற்படுமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக நாட்டின் பெரும்பாலன மாவட்டங்களின் காற்றின் தரம் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் அளவுக்கு வந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அவ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, பதுளை, குருநாகல், கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் காற்றின் தரச் சுட்டெண் ஆரோக்கியத்திற்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய மட்டத்தில் உள்ளது.

வறண்ட வானிலை மற்றும் அயல் நாடுகளில் இருந்து வீசும் தீங்கு விளைவிக்கும் தூசித்துகள்கள் இந்த நிலைமையை ஏற்படுத்தியுள்ளன.

இதன் காரணமாக இதய நோய், சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், முதியவர்கள் மற்றும் சிறு குழந்தைகள் பொது வெளியில் முகக்கவசம் அணிவது அவசியம் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ந-7)

## மின் கட்டணக் குறைப்பு அமைச்சர் கஞ்சன தகவல்

(கொழும்பு)

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் இம்மாத இறுதிக்குள் மின் கட்டணத்தைத் குறைக்க முடியும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

மேலும், மின்சாரக் கட்டணத் திருத்தத்திற்குத் தேவையான பரிந்துரைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் மீண்டும் முன்வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தெற்காசியாவில் அதிக மின்சாரக் கட்டணம் அறவிடும் நாடாக இலங்கை உள்ளது.

இவ்வாறான நிலையிலேயே, இம்மாத இறுதிக்குள் மின் கட்டணத்தை குறைக்க முடியும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (ந-7)

## சட்டவிரோத மரக்கடத்தல் ஒருவர் பொலிஸாரால் கைது

அனுமதிப்பத்திரம் இன்றி 12 பனைமரக் குற்றிகளை ஏற்றிச் சென்றவர் சாவகச்சேரி - மட்டுவில் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது பனை மரக்குற்றிகள் மற்றும் அவற்றை [illegible] பயன்படுத்திய வாகனத்துடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளைசெவ்வாய்க்கிழமை **காலை 08:30 மணியிலிருந்து மாலை 5:00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** ஓமினி அலுமினியம் தொழிற்சாலை-கரந்தன், அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி, கரந்தன், மாலை வைரவர் கோவிலடி, போயிட்டி, பொக்கணை, ஊரெழு அம்மன் கோவில் சீனோர் - படகுதுறை-காரைநகர், கடற்படைதளம்-காரைநகர், காரைநகர் கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ - காரைநகர், களபூமி, பாலக்காடு அம்மன் கோவிலடி - காரைநகர், தோப்புக்காடு-காரைநகர், ஊரி -காரைநகர் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை எனும் இடத்திலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

20

யாழ்ப்பாணத்தின் பிரிவுகளுக்குட்பட்ட கோவில்பற்றுக்களின் (parish) கோப்புகளின் பிரதிகள் அப்பிரிவுகளின் உடையார்களிடம் பொறுப்புக் கொடுக்கப்பட்டன.

நில உரிமை யாளர்கள் தமது காணிகளை விற்கும்போதோ அல்லது குத்தகைக்குக் கொடுக்கும் போதோ அக்காணிகளின் பத்திரத்தின் பிரதியை உடையாரிடம் பெற்றுக் கொள்ளமுடியும்.

யாழ்ப்பாண இராச்சியத்துள் அடங்கியிருந்த மன்னார், மாதோட்டம் மற்றும் வன்னி ஆகிய பகுதிகளுக்கும் தனியான தோம்புகள் எழுதப்பட்டிருந்தன.

### ஒல்லாந்தர் காலத்தில் நெறிமுறைப்படுத்தப்பட்ட தேச வழமைச்சட்டம்

முடியாட்சிமுறையின் கீழ் ஆளப்பட்டு வந்த யாழ்ப்பாண இராச்சியத்தில், சட்டம் ஒழுங்கு முதலியவை எழுத்தில் இல்லாத ஆனால் குறைந்தது மூன்று, நான்கு நூற்றாண்டுகளாகவாவது நடைமுறையில் இருந்து வளர்ந்த ஒரு சட்டமுறை இருந்திருக்கிறது.

கி.பி. 1620 இல் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றித் தங்கள் நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்த பின்னரும், அவர்கள், யாழ்ப் பாணத்தின் உள்ளூர் முதலியார்கள் ஊடா கவே மக்களைக் கட்டுப்படுத்தி வந்தமையால் பழைய நடைமுறைகளே யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டன.

18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், யாழ்ப்பாண இராச்சியத்தின குடிகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை எழுத்து மூலமாகத் தொகுக்கும் பொறுப்பு, அன்றைய டச்சு ஆளுநர் கோர்னெலிஸ் ஜோன்சை மன்ஸ் என்ப வரால் யாழ்ப்பாணத்தில் திசாவை பதவி வகித்த கிளாஸ் ஈசாக்ஸ் என்பவருக்கு வழங்கப்பட்டது.

அவர், யாழ்ப்பாணத்துமுதலியார்கள் (உதாரணம்: டொன் பிலிப் வில்லைவராச முதலியார், டொன் அந்தோனி நாராயணன், டொன் வாஸ் முதலியார், டொன் பிரான்சிஸ்கோ அருளம்பல முதலியார் போன்றோர். அந்தக் காலத்தில் அரசில் பதவிவகிப்பதாயின் உத்தியோகத்தர்கள் டச்சு நாட்டுப் பெயர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்) 12 பேரின் உதவியுடன் நாட்டின் வழமைகளைத் தொகுத்தார். இதுவே தேசவழமைச்சட்டம் எனப்படுகின்றது.

யூன் 4.1707 ஆம் ஆண்டில் ஒல்லாந்த அரசினால் யாழ்ப்பாணத்துக்கு உரிய சட்டமாக இது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இச்சட்டம் டச்சு மொழியில் எழுதப்பட்டுத் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டது.

ஒல்லாந்தர் உள்ளூர் பிரச்சினைகளில் ஈடுபடாமல் ஆதிக்க வகுப்பின் மூலம் ஆட்சியைக் கட்டுப்படுத்தும் தந்திரத்துக்கு அமையவே தேச வழமைச் சட்டத்தை அப்போதைய யாழ்ப்பாண ஆதிக்க வகுப்பின் ஆளுமைகளைக் கொண்டு தொகுத்தனர். பின்னர் ஆங்கிலேயரால் 1806 ஆம் ஆண்டு சட்ட மூலமாக்கப்பட்டது. இச் சட்டமானது பின்னர் 1869 இலும் பின் 1911 இலும்கடைசியாக 1948 இலும் திருத்தியமைக்கப்பட்டது. இச் சட்டம் உடைமை, உரிமைகள் பற்றியும் திருமணம் பற்றியும் விபரமான வரையறைகளைக் விபரிக்கின்றது.

இலங்கையில் பொதுவான சட்டமான பொதுச் சட்டக் கோவைக்கு மேலதிகமாக உள்ள மூன்று சட்டங்களில் தேசவழமைச் சட்டமும் ஒன்று. ஏனையவை இரண்டும் கண்டிச் சட்டம், இஸ்லாமியச் சட்டம் ஆகியவையாகும். கண்டிச்சட்டமானது கண்டி வாழ் பௌத் தர்களுக்கும், இஸ்லாமியச் சட்டமானது இலங்கை வாழ் இஸ்லாமியர்களுக்கும், தேசவழமைச் சட்டமானது வட மாகாணத்தில் (யாழ்பாணத்தில்) வாழும் மக்களுக்கும் மாத்திரமே இயல்புடையதாகிறது.

தேசவழமைச் சட்டத்திற்குட்பட்ட திருமணமான பெண் அசையா ஆதனம் தொடர்பாக எந்த உறுதியையும் தனது கணவனுடன் சேர்ந்தே (கணவரின் சம்மதத்துடன்) எழுத வேண்டும் என்பது கட்டாய விதியாகும். அது அவளது தனிப்பட்ட சொத்தாக இருந்தாலும் சரி, தேடிய, தேட்டப்பங்கு அல்லது சீதனம், நன் கொடையாவற்றுக்கும் இது பொருந்தும்.

எனினும் 1911 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் படி சில காரணங்களை நிரூபித்து மாவட்ட நீதி மன்றின் அனுமதியைப் பெற்ற பின்னர் கணவரின் சம்மதமின்றி அவளது அசையா ஆதனத்தையும் கைமாற்ற முடியும்.

திருமணமான ஆண்தான் திருமணம் செய்வதற்கு முன்னர் வாங்கிய அறுதி ஆதனத்தையும் அவனுக்கு நன்கொடை, முதுசொம், உரிமை வழி வந்தடைந்த ஆதனத்தையும் கை மாற்றம் செய்ய முழு உரிமையுடையவன். அதேபோல் திருமணத்தின் பின்வாங்கிய தேடிய தேட்டத்தில் சரி அரைப் பங்கை தன் விருப்பப்படி எதுவும் செய்யலாம்.

குடியியல் வழக்கு ஒன்றில் தேச வழமைக் குட்பட்ட திருமணமான பெண் ஒருவர் அவளது கணவனுடன் இணைந்தே வழக்காளியாகவோ எதிராளியாகவோ தோன்ற முடியும். மேலும், குற்றவியல் வழக்கிற்கு இது பொருந்தாது.

ஆதனங்கள் தொடர்பான தேச வழமைச் சட்ட ஏற்பாடுகள்: தேச வழமைச் சட்டத் தின் கீழ் ஆதனங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் பட்டுள்ளது.

- முதுசொம்
- சீதனம்
- தேடியதேட்டம்.
- உரிமை

### முதுசொம்

ஒருவரது பெற்றோர் இறப்பதால் அல்லது பெற்றோர் வழி மூதாதையர் இறப்பதால் வழிவழியாக ஒருவரை வந்தடையும் ஆதனமே "முதுசொம்" எனப்படும். கணவனுடைய முதுச ஆதனத்தில் மனைவிக்கோ அல்லது மனைவியினுடைய முதுச ஆதனத்தில் கணவனுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது. இறந்த ஒருவரின் முதுச ஆதனம் அவரது பிள்ளைகளையே சென்றடையும். அவரது வாழ்க்கைத்துணை அவ் ஆதனத்தில் உரிமை கோர முடியாது. முதுச ஆதனத்தை விற்றுவரும் பணத்தில் வாங்கும் ஆதனமும் முதுசஆதனமேயாகும்.

### சீதனம்

முறையான திருமணம் செய்து கொள்ளும் பெண்ணுக்கு திருமணத்தை முன்னிட்டு கொடுக்கப்படும் ஆதனமே சீதனமாகும். திருமணத்திற்கு முன்னரோ திருமணத் தன்றோ அல்லது திருமணத்தின் பின்னரோ சீதனம் கொடுக்கப்படலாம். சீதன ஆதனமானது சீதன உறுதி மூலமே கொடுக்கப்படும்.

சீதன ஆதனம் மனைவிக்கு மட்டுமே உரிய தனிச் சொத்தாகும். சீதனம் கொடுக்கப்பட்டால் அதன் பின் எக்காரணம் கொண்டும் அதனை கைமீட்க முடியாது. சீதனத்தைப் பெற்றுக் கொண்ட பெண் அந்த ஆதனத்தை கைமாற்றம் செய்யாமல் இறந்தால் மட்டுமே அவளது பிள்ளைகளை அது சென்றடையும். பிள்ளைகள் இன்றி இறப்பாராயின் சீதனத்தையார் கொடுத்தார்களோ அவர்களை அவ் ஆதனம் மீளச் சென்றடையும். அவர்களும் இறந்திருப்பின் அவளது சகோதரங்களுக்கு சம பங்காக சென்றடையும்.

அசையா ஆதனத்தை சீதனமாக பெற்றுக் கொண்ட பெண் அதன் பின் அவளது பெற்றோர் இறந்த பின் அவர்களது மேலதிக சொத்தில் பங்கு கோர முடியாது.

ஆனால் அசையா ஆதனத்தை சீதனமாகப் பெறாது நன்கொடையாக பெற்றுக் கொண்ட பெண் பெற்றோர் இறந்த பின் அவர்களது சொத்தில் பங்கு கோர முடியும். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாணின்...

துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாண் இறாத்தல் ஒன்றின் எடை 450 கிராமாக இருக்க வேண்டும் என அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலின் காரணமாகவே இவ் விலை அதிகரிப்பு இடம்பெறவுள்ளது.

பாணுக்கான மூலப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதன் காரணமாக, 450 கிராம் எடையுள்ள பாணை 160 ரூபாய் முதல் 170 ரூபாய் என்ற விலைகளில் விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

அத்துடன், பாணை சரியான எடையில் தயாரிக்குமாறு தமது உறுப்பினர்களுக்கு அறிவுறுத்த முடியும் எனவும், ஆனால் அதிகபட்ச விலையை நிர்ணயிக்க முடியாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## மக்களால்...

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அண்மையில் புதிய பாராளுமன்ற கூட்டத் தொடரினை ஆரம்பித்து ஜனாதிபதி ஆற்றிய அக்கிராசன உரையில் நாட்டின் நலன்கருதி அனைத்து கட்சிகளையும் தம்முடன் இணைந்து செயற்படுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

மேலும் "ரணில் விக்கிரமசிங்க என்பவர் மக்களால் நிராகரிக்கப்பட்டவர். மக்கள் வாக்குகளால் பாராளுமன்றம் கூட வர முடியாமல் போனவர். அப்படியான தலைவர்களுடன் எமக்கு எவ்வித கொடுக்கல் - வாங்கல்களும் இல்லை. மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வரும் தலைவர்களுடன்தான் பேச்சு நடத்த வேண்டும் என்பதே எமது கொள்கை.

எந்தத் தேர்தலை ஒத்திவைத்தாலும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது. நிதி இல்லை எனவும் கூற முடியாது.

ஜனாதிபதியால் 19 தடவைகள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குப் பணம் இருக்கின்றதெனில், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு மட்டும் பணம் இல்லாமல் போகிறதா எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (ந-7)

## பொலிஸ்...

ராஜ் என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் நிலையத்தின் அறையொன்றிலிருந்து நேற்று அதிகாலையில் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப கட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளதாக தெரிய வந்துள்ள போதிலும் தற்கொலைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-7,33)

## ஜெனிவா...

கவனத்தில் கொள்ளப்பட உள்ளது.

இதன்போது இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் வாய் மூல விளக்கமளிப்பு இடம்பெறும்.

எவ்வாறாயினும் ஜெனிவா நகர்வுகள் குறித்து அங்குள்ள இலங்கை தூதரகம் ஊடாக அவதானித்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அதேபோன்று இலங்கையின் சமகால மனித உரிமை முன்னேற்றங்கள் மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகளில் அடைந்துள்ள இலக்குகள் தொடர்பில் முழுமையான அறிக்கையினை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்க உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-7)

## கலாசார...

ருத்தி உத்தியோகத்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்றைய தினம் உயிரை மாய்த்துள்ளார்.

டச்சு வீதி மூளாய் சுழிபுரம்பகுதியைச் சேர்ந்த பேரம்பலம் புனிதா (வயது-49) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமை புரிந்து வரும் நிலையில் இவருக்கு இடமாற்றம் கிடைத்தது. இவ் இடமாற்றத்தை இரத்துச் செய்வதற்கு முயற்சித்துள்ளார். எனினும் முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இந்நிலையில் நேற்றைய தினம் அவரது இல்லத்தில் தூக்கிட்டு உயிர் மாய்த்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ந-7)

## பொதுச்...

யாடலும் முடிவின்றி நிறைவடைந்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சைக்கு தீர்வு காணும் முகமாக தற்போதைய பதில் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் தலைமையில் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதில் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் செயலாளர் பதவிக்கு போட்டியிட்ட இரு அணிகளையும் சேர்ந்த ச.குகதாசன், ஞா.சிறிநேசன், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன் போது திருகோணமலையைச் சேர்ந்த குகதாசனும், மட்டக்களப்பைச் சேர்ந்த சிறிநேசனும் பொதுச் செயலாளர் பதவியை ஒவ்வொரு வருடமாக பகிர்ந்து கொள்வது தொடர்பில் பேசப்பட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

எனினும் முதலில் யார் ஒரு வருடம் பதவி வகிப்பது என்பது தொடர்பில் இருவருக்கும் இடையில் இணக்கப்பாடு இன்றி முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில் முடிவுகள் எட்டப்படாத நிலை உருவாகியது.

இருவரும் தாம் பொதுச் செயலாளராக வருவதற்குரிய காரணங்களை நியாயப்படுத்தியிருந்தனர். எனினும், இருவரும் பேசி இரண்டு நாட்களுக்குள் முடிவு தருமாறு கூறி நேற்றைய கலந்துரையாடல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.(ந-7,250)

## மோ.சைக்கிள்...

கொண்டிருந்தவர் மீது மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் நெல் பரவிக்கொண்டிருந்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்தவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2024.02.11
சீட்டிழுப்பு இலக்கம் 0213
U 1 3 2 2 0 9 U

தன நிதானய
திகதி - 2024.02.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1417
H 22 50 57 70 H
13883

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3629
சீட்டிழுப்பு திகதி 11.02.2024
A 37 49 58 73
A 80133

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2024.02.11
சீட்டிழுப்பு இலக்கம் 0696
மீனம் 35 36 42 53 மீனம்
20002 19

மஹஜன சம்பத
திகதி 2024/02/11
சீட்டிழுப்பு இலக்கம் 5387
F 5 6 8 1 6 9

மெகா பவர்
திகதி 11/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1735
N 10 29 33 37 75
42426

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2187
சீட்டிழுப்பு திகதி: 2024.02.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,366,889.60
09 39 42 43 P

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 10 44 63 64 70
1537
11.02.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 504,860,986.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4073
சீட்டிழுப்பு திகதி 2024.02.11
தினம் ஞாயிற்றுக்கிழமை
29 39 42 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,794,628/-

சசிரி
வெற்றி வாரம் 440
சீட்டிழுப்பு திகதி 2024.02.11
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 02 30 40
07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,653,440/-

சனிதா
திகதி 2024.02.11 வெற்றி வாரம் 4522
வெற்றி இலக்கங்கள் 05 27 42 46 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,914,423.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2361
சீட்டிழுப்பு திகதி 2024.02.11
தினம் ஞாயிற்றுக்கிழமை
16 39 61 67 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,995,973.60

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 11.02.2024 வெற்றி வாரம் 095
E 5 5 3 5 7 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,792,588.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18955)

076 825 7716 (ஆகாஸ்)


## வெடுக்குநாறி...

வவுனியா வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலய விவகாரமானது பல கட்டப் போராட்டங்களைச் சந்தித்தது, பின்னர் நீதி மன்றம் வரை சென்று, அப்பகுதியில் தமிழர்கள் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது.

இந்நிலையிலேயே நேற்று பிக்குகள் தலைமையிலான குழுவினர் இராணுவப் பாதுகாப்புடன் அங்கு சென்றுள்ளனர்.

அங்கு காணப்படும் தொல்பொருள் ஆதாரங்கள் உள்ளிட்டவற்றினை சுற்றிப் பார்த்ததோடு, இது எங்கள் இடம், எங்களுக்கு சொந்தமான பூமி என அங்கு பிரசன்னமாகியிருந்த ஆலய நிர்வாகத்தினரிடம் கடுப்போடு கூறியுள்ளனர்.

மேலும் வழிபாட்டு இடமாகக் கருதப்படும் புனித பூமியில் ஆதிலிங்கேஸ்வரர் அருகிலும் குறித்த குழுவினர் பாதணிகளுடன் நடமாடியமை பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை ஓர் ஜனநாயக நாடு என்ற போதிலும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட வெடுக்குநாறிமலை உட்பட்ட சைவ சமயம் சார்ந்த தொல்பொருள் சின்னங்கள் நிறைந்த இடங்கள் பௌத்த கடும்போக்குவாதிகளால் இராணுவத்தினது உதவியுடன் பௌத்த மயமாக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வெடுக்குநாறி ஆலயத்திலும் இராணுவத்தினர் பின்புலத்தில் இருந்து பௌத்தமயமாக்கலுக்கு ஆதரவளிக்கின்றனர் என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

(ந-7,250)


**சிறுநீரகம் தேவை**

O+ குருதி வகையைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் 63 வயதுடைய ஆண் ஒருவருக்கு அதே குருதி வகையைச் சேர்ந்த (O+ குருதி வகை) சிறுநீரகம் தேவை. (18978)

077 844 9730
076 970 0194

**யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
மொத்தமாக 55 மில்லியன் (5 கோடியே 50 லட்சம்)
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)
தொடர்புகளுக்கு :
+447963743585(Whatsapp)
021 222 7141(Srilanka)
E.mail : Jamesraj uk@yahoo.co.uk
(18948)

**V2 VISA SERVICES**
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8335)

**விற்பனையாளர் தேவை (பெண்)**


சுன்னாகத்தில் இயங்கும் புத்தகசாலை ஒன்றிற்கு விற்பனையாளர்(பெண்) தேவை.
தொடர்புகளுக்கு :
076 749 0219
(C-8328)

**வீடு விற்பனைக்கு**

- கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் மாடிவீடு விற்பனைக்கு உண்டு.
- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்திக்கு அருகில் வீடு விற்பனைக்கு உண்டு.

076 742 4301, 075 742 1612
(18977)

**துரித பொதிகள் சேவை**



சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
அவுஸ்திரேலியா விசேட சலுகை உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணெய் வகைகள் என்பன எம் ஊடாக அனுப்பிட முடியும்.
ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.
திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528
(18946)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


## மரண அறிவித்தல்



தோற்றம் 02 - 03 - 1945

மறைவு 11 - 02 - 2024

### வேலுப்பிள்ளை பரராஜசிங்கம்

8 ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வேப்பங்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரராஜசிங்கம் அவர்கள் 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சதாசிவம் - மருக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும் ஸ்ரீகாந்தா(கலா) அவர்களின் அன்புக் கணவரும் காயத்திரி(ஆசிரியர், வ/ மூன்றுமுறிப்பு அ.த.க. பாடசாலை), தினேஸ்குமார்(கட்டார்), சதீஸ்குமார்(பிரான்ஸ்), சுரேஸ்குமார்(விவசாயப் போதனாசிரியர், விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகணேசன்(அதிபர், வ/பறன்நட்டகல் அ.த.க பாடசாலை), சுகிர்தா(வவுனியா), வினோதா(பிரான்ஸ்), சுதாமதி(சுற்றாடல் அதிகாரி, மத்திய சுற்றாடல் அதிகார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யோதனா, விஜய், மதுஷிகா, யதுஷிகா, சஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நவரட்ணராஜா(மின் பொறியியலாளர் யாழ். மாநகரசபை), காலஞ்சென்ற இராஜசேகரம்(பாலு), வசந்தமலர்(வசந்தா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயசேகரம்(கனடா), உலகராசா(கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12.02.2024 இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது வவுனியா இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வேப்பங்குளம்,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்
077 197 4101

(C-8332)

## மரண அறிவித்தல்



### Dr.பொன்னம்பலம் இராமநாதன்

(ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பிரபல சித்த வைத்தியர் பொன்னம்பலம் இராமநாதன் 10.02.2024 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாவடியைச் சேர்ந்த பிரபல சித்த வைத்தியர் ஆறுமுகம் பொன்னம்பலம் (பரமு வைத்தியர்) - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான உடுவிலைச் சேர்ந்த வல்லிபுரம் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் பேராசிரியர் கலைவாணி (யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புக் கணவரும் பரந்தாமன் (Cardiac Physiologist, Newzealand), பிரகலாதன் (Engineer, NHDA, Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும் பபிதா (NewZealand), Dr.கிருசானி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீராம், லக்ஸ்மன், ஆதித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும் Dr.ஆறுமுகராஜா (UK), Dr.விவேகானந்தன் (UK), புவனேஸ்வரி (India), ஈஸ்வரி (Colombo) மற்றும் காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் வாசவன் (Colombo), மோகன் (Germany), கலாராணி (Canada), உசாலினி (Germany), கயல்விழி (Canada), தசவரதன் (Canada) மற்றும் காலஞ்சென்ற ஆதவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.02.2024 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தாவடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வீதி,
தாவடி சந்தி.

தகவல்:
குடும்பத்தினர்

(C-8331)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org